Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 13 ஞாயிற்றுக்கிழமை (26.04.2015) பக்கங்கள் 20 ஓசை - 208

# நிலநடுக்கத்தால் நேபாளத்தில் பேரழிவு

## 1500 பேர் உயிரிழப்பு

## வரலாற்றுப் பொக்கிஷங்கள் தரைமட்டம்



(லண்டன்)

நேபாளத்தில் நேற்றுக்காலை ஏற்பட்ட பாரிய நிலநடுக்க பேரழிவில் சிக்கி 1500 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதுடன் மேலும் பலர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாமென அந்நாட்டின் அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவிற்கும், பொக்காரா நகரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுக்காலை 7.8 மெக்னிடியூட் பூமியதிர்வு தாக்கியுள்ளதாக அமெரிக்காவின் புவியியல் ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

இதன் தாக்கம் பிராந்தியத்தின் பல பகுதிகளிலும் உணரப்

19 ஆம் பக்கம் பார்க்க

## சில விடயங்கள் குறித்து 19 உடன் உடன்பாடில்லை

### என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள 19 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள சில விடயங்கள் குறித்து உடன்பட முடியாதுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளதாவது,

நாளைய தினம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள 19ஆவது திருத்தச் சட்டத்திற்கு சில திருத்தங்களை முன்வைக்கவுள்ளோம்.

குறித்த 19ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள சில விடயங்கள் குறித்து உடன்பட முடியாதுள்ளது.

19ஆம் பக்கம்பார்க்க

## திருத்தங்களை ஏற்றாலேயே 19இற்கு ஆதரவு

### நிமால் தெரிவிப்பு

திருத்தங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால் 19ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். எதிர்வரும் 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் 19ஆவது திருத்தச் சட்டம் குறித்த நாடாளுமன்ற விவாதமும், வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது. சில திருத்தங்களை ஏற்றுக் கொண்டால் மட்டுமே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவு வழங்கப்படும் என்பது பிரதமருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரை பணி நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும் மற்றும் அரசியல்

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி சபைகள் மே 15இல் கலைப்பு

எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படும் என பொது அமைதிக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பின்னர் அதன் நடவடிக்கைகளை கவனிப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என அமைச்சரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

234 உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவிக் காலங்கள் கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன்

19 ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்ற பிரதிநிதித்துவ இழப்பை ஈடுசெய்யும் வகையில் தேர்தல்கள் சீர் திருத்தம்

### வலியுறுத்துகிறார் டக்ளஸ்



எமது தாயகப் பிரதேசங்களில் இயற்கைக் காரணிகளால் நிகழ்ந்த மரணங்களிலும் பார்க்க அதிகளவிலானோர் மரணித்ததாலும், பொருளாதாரக் காரணிகளுக்காக நடைபெறும் குடியகல்விலும் பார்க்க பாரிய அளவிலான குடியகல்வுகள் இடம்பெற்றதாலும், இம் மாகாணங்களில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களில் ஏற்பட்டுள்ள இழப்பை ஈடு செய்யும் வகையில் தேர்தல் முறைமையிலான சீர் திருத்தம் அமைய வேண்டும் என அரசாங்கத்திடமும், எதிர்க்கட்சித் தலைவரிடமும், தேர்தல்கள் ஆணையாளரிடமும் நாம்

19 ஆம் பக்கம் பார்க்க

## குடும்பஸ்தர் அடித்துக்கொலை

(கரணவாய்)

அல்வாயில் நேற்று இரவு இடம்பெற்ற கைகலப்பில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் அடித்துக்கொல்லப்பட்டுள்ளார். அல்வாய் வடக்கு அல்வாயைச் சேர்ந்த சின்னத்தம்பி திருச்செல்வம் (வயது 48) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 8 மணியளவில் பிரஸ்தாப குடும்பஸ்தரின் வீட்டுக்கருகில் இடம்பெற்ற கைகலப்பையடுத்து இனந்தெரியாதோரினால் குடும்பஸ்தர் அடித்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய பிரதமருக்கான கடிதம்; நெறிமுறை மீறினாரா விக்கி

பிரேமானந்தா வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற நான்கு இலங்கைத் தமிழர்களை விடுதலை செய்வது தொடர்பாக கவனம் செலுத்தக் கோரி, வட மாகாண முதலமைச்சர்,சி.வி. விக்னேஸ்வரன் இந்தியப் பிரதமருக்கு அதிகார பூர்வமாக கடிதம் அனுப்பியிருந்தால், அது நெறிமுறை மீறலாக இருக்குமென இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு அளித்துள்ள செவ்வியில் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் இவ்வாறு கூறியுள்ளனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர்,

முதலமைச்சர் முதலில் கடிதத்தை வெளிவிவகார அமைச்சுக்கே அனுப்ப வேண்டும்.

வெளிவிவகார அமைச்சு தான் அதனை, குறிப்பிட்ட நாட்டின் வெளிவிவகார அமைச்சின் ஊடாக அனுப்ப முடியும்.எனினும், வடக்கு மாகாண முதல

19 ஆம் பக்கம் பார்க்க



முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 12 சனிக்கிழமை (25.04.2015) பக்கங்கள் 20 ஓசை - 207

பாலியல் குற்றவாளிகளை விடுவிக்க விக்கி சிபார்சு

தமிழரசுக் கட்சி அறிவித்தபடி அகிம்சைப் போரை தொடங்காத 117 வது நாள்

# இளைஞர் கழகங்களை ஸ்தாபிக்க விரைவில் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கிராம அலுவலர் பிரிவு தோறும் இளைஞர் கழகம் விரைவில் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இதன் ஊடாக வாலிபர் நாடாளுமன்றத்தை வழிப்படுத்த அரசாங்க நிர்வாக மாகாண சபைகள துரித நடவடிக்கையினை விரைவில் எடுக்கும்.

இவ்வாறு அரசாங்க நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு செயலாளர் ஜே.தடல்லகே வடக்கு பிரதம செயலர்களின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

மாகாண மட்டத்தினுள் இளைஞர் கழகத்தினை புனரமைப்பு செய்வதற்கும் வாலிபர் நாடாளுமன்றத்தை மாற்றியமைத்து வலுப்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட நடவடிக்கை எடுத்துள்ளார்.

எனவே வடமாகாணத்தில் உள்ள அரச அதிகாரிகள் இச்செயற்திட்டத்தை முனைப்புடன் நடாத்த ஒருங்கிணைந்த ஒருங்கிணைவு தேவை என கேட்டுள்ளது அரசு. (92)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவர் நெல்லியடி பொலிஸாரால் கைது

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸார் இரவு நேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்துக்கிடமாக வாகனம் ஓட்டிய நபர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த நபர் பொலிஸாரினைக் கண்டதும் வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றுள்ளார் அவரைத் துரத்திச் சென்ற பொலிஸார் நீண்ட நேரத்தின் பின் கரவெட்டி வைத்தியசாலைக்கு முன் வைத்து குறித்த நபரைக்கைது செய்துள்ளனர்.

அவரை சோதனையிட்ட போது அவர் மது போதையில் வாகனம் செலுத்தியமை தெரிய வந்துள்ளது. அத்துடன் அவரிடம் வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப் பத்திரம் காப்புறுதி பத்திரம் போன்றவை இல்லாதமையும் கண்டு பிடிக்கப்பட்டது.

அவர் மீது 5 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (18)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 . 12 . 1990



இறப்பு 08 . 05 . 2014

**சுரேஸ்வரன் சுரேகன் (ஜம்பு)**

(திதி :- 27.04.2015 நவமி)

தாய் இன்றி தந்தை இன்றி
உன்னுடைய அரவணைப்பில் வாழ்ந்தோமடா
இன்று நீயும் இன்றி
தனிமையில் வாடுகின்றோம்
எப்போது நாம் இனி உன்னைக் காண்பது
காலம் இருக்குமோ இல்லையோ – ஆனால்
தேகம் இருக்கும் வரை நீ இருப்பாயடா
எங்கள் நெஞ்சில்

இப்படிக்கு
சகோதரர்கள்
சு.நிரோ, சு.பிறின்சி
ம.ரஜீவன்

இல,14, அரசடி வீதி
அரியாலை, யாழ்ப்பாணம். (R/505)


## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | ஞாயிற்றுக்கிழமை |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா (R) |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் (R) |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | சிறப்பு திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் (R) |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08.20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |

# நூறு நாட்கள் வேலைத்திட்டம் கிட்டாமைக்கு சில தமிழ் அரசியல்வாதிகளே காரணம்

## ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் தெரிவிப்பு

ஆட்சி மாற்றம் நடந்து, புதிய அரசாங்கம் அறிவித்த, நூறு நாட்கள் வேலைத்திட்டத்தை தமிழ் பேசும் மக்கள் உரிய முறையில் அனுபவிக்க முடியாமல் போனமைக்கு பொறுப்பற்ற சில தமிழ் அரசியல் வாதிகளே காரணம் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

காலம் நம் கைகளில் அரியபல வாய்ப்புகளைத் தந்துவிட்டு சென்று கொண்டிருக்கிறது. ஆனாலும், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பது போலவே புதிய அரசாங்கம் அறிவித்திருந்த நூறு நாட்கள் வேலைத்திட்டத்தின் பயன்களைக்கூட எமது மக்கள் உரிய முறையில் அனுபவிக்கமுடியாமலேயே போய்விட்டது.

தமிழ்த் தரப்பில் இருந்தும் அரசாங்கத்தின் உயர் பீடமான தேசிய நிறைவேற்றுச்சபையில் பங்கெடுத்துவருகிறார்கள். இதேபோல் அரசாங்கத்தின் அமைச்சு அதிகாரங்களிலும் பங்கெடுத்து வருகின்றார்கள்.

ஆனாலும் இவர்கள் அரசாங்கத்துடனான தமது உறவுகளைப் பயன்படுத்தி, நூறு நாட்கள் வேலைத்திட்டத்தை தமிழ்மக்களை நோக்கி எடுத்துவரத் தவறிவிட்டார்கள். நூறு நாட்கள் வேலைத்திட்டத்தை மட்டுமன்றி அதற்கு அப்பாலும் சென்று பெற வேண்டிய அரசியலுரிமைக்கான முயற்சிகளையும் தவறவிட்டு வருகிறார்கள்.

அரசியல் அதிகாரப்பலத்தை தம்வசப்படுத்தி வைத்திருப்பவர்கள் அதை எமது மக்களுக்காக சரிவரப்பயன்படுத்த விரும்பாத வரலாற்றுத்தவறுகளே இன்னமும் நீடித்துச்செல்கிறது. இது போன்ற பொறுப்பற்ற செயல்களினால் எமது மக்களே வரலாற்றில் தொடர்ந்தும் அரிய வாய்ப்புகளை இழந்து, துயரப்பட்டு நிற்கிறார்கள்.

அரசியல் பலத்தைவைத்து எமது மக்களுக்காகப் பேரம் பேசவேண்டியவர்கள், அர்த்த மற்றவீரம் பேசிகாலம் கழித்து வருகிறார்கள். எமது மக்களின் வாழ்வுரிமைக்காகவும், அதிகாரப்பகிர்விற்காகவும்


அரசுடன் பேரம் பேசி பெற வேண்டிய வாய்ப்பை பெற்றிருந்தாலும் இவர்கள், தமது கட்சிகளுக்கிடையிலான அதிகாரப்போட்டிகளிலும், சுயலாப அரசியல் செயற்பாடுகளிலும் மட்டுமே ஈடுபட்டு வருகிறார்கள்.

நாம் தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டகாலம் தொட்டு, அரசியல் பலமுள்ளபோது நாம் ஆற்றிய பணிகளை யாரும் மறந்துவிடப்போவதில்லை.

அதேபோல், அரசாங்கத்தின் அமைச்சு அதிகாரத்தில் பங்கெடுத்திருந்த காலத்திலும் எமது அரசியல் பலத்திற்கு ஏற்றவாறு ஆற்றிய பணிகளையும் யாரும் மறுத்து விடமுடியாது.

பொறுப்பற்ற தமிழ் அரசியல்வாதிகளிடம் அரசியல் பலம் இருந்தும் பயனில்லை என்பதற்கு நூறுநாட்கள் வேலைத்திட்டத்தை சரிவரப்பயுன்படுத்தாமை இன்னொரு உதாரணமாகும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

# பழைய வெடிபொருட்கள் விக்டோரியா வீதியில் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.விக்டோரியா வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து பழைய வெடிபொருட்கள் நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வீட்டின் மலசல கூடத்தினை துப்புரவு செய்யும் போது, பழைய வெடிபொருட்கள் இருப்பதைக்கண்டு வீட்டு உரிமையாளர் யாழ்.பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அந்தத் தகவலின் பிரகாரம் படைப்பிரிவினர் இவ்வெடி பொருட்களை மீட்டுள்ளனர். (25)

# மருத்துவ பீட மாணவர்களின் வருடாந்த நாடக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட 34 ஆம் அணி மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள வருடாந்த நாடக விழா இன்று நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் "ஹுவர்" அரங்கில் இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

# ஆழிப்பேரலை நினைவாலயம் அமைக்க மாகாண சபையால் 2 மில்லியன் ஒதுக்கீடு

முல்லைத்தீவில் ஆழிப்பேரலை நினைவாலயம் அமைப்பதற்கு வடமாகாணசபையால் 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக என்று வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். நினைவாலயம் அமைக்கப்பட இருக்கும் இடம் அண்மையில் கள ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2004 ஆழிப்பேரலை பேரழிவின் போது உயிரிழந்த ஆயிரக்கணக்கிலான எங்கள் உறவுகளின் உடல்கள், முள்ளியவளை மாமூலை-நெடுங்கேணி பாதையில் கயட்டை என்கிற இடத்தில் விதைக்கப்பட்டிருந்தது. கடல்கோள் பேரழிவு நடந்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் அவ்விடத்தில் ஒரு நினைவாலயம் இன்னும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு முறையும் நினைவு நாளுக்கு முன்னதாக மக்கள் அங்கே சென்று அவ்விடத்தை துப்புரவு செய்தே உறவுகளை நினைவு கூர்ந்து வந்தனர்.

இந்நிலையில்,ஒரு சிறப்பு ஒதுக்கீட்டின் ஊடாக ,அவ்விடம் புனரமைக்கப்பட்டு நினைவிடம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று இவ்வாண்டு தொடக்கத்தில் முதலமைச்சரிடம் எழுத்து மூல கோரிக்கை விடப்பட்டது.

அத்துடன் மாகாண நிதி ஒதுக்கீட்டுக் கூட்டத்திலும் இதன் முக்கியத்துவத்தை தெளிவு படுத்தியிருந்தேன்.

இதையடுத்து வட மாகாண சபையால் சிறப்பு ஒதுக்கீடாக 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உறவுகள் விதைக்கப்பட்ட 7 இடங்களை தனித்தனியாக அடையாளப்படுத்தல் ,நினைவுத் தூபி அமைத்தல் மற்றும் சுற்றுமதில் அமைத்தல் உள்ளிட்ட விடயங்களின் அளவீடுகள் மற்றும் மதிப்பீடுகள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டது. கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இவ்விடத்தில் நினைவாலயம் அமைக்கப்பட வேண்டும் என்று மக்கள் வைத்த கோரிக்கை நிறைவேற்றப்பட உள்ளமை மனநிறைவைத் தருகிறது. என்று தெரிவித்தார். 160

# சட்டவிரோத மணல் அகழ்ந்த சந்தேக நபருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)


கொடிகாமம் கெற்பெலி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்த போது கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு சாவகச்சேரி நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன், 50,000 ரூபாய் அபராதம் விதித்தார்.

கடந்த ஜனவரி மாதம் கெற்பெலி பகுதியில் சட்ட விரோதமான முறையில், உழவு இயந்திரத்தில் மண் அகழ்ந்த போது கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில்பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

வழக்கினை விசாரித்த நீதவான் மேற்படி அபராத தொகையினை செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் மணலை பறிமுதல் செய்யுமாறு பொலிஸாருக்கு பணித்தார். (11)

# குறைபாடுகளோடு இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள்

## சீர் செய்ய பெற்றோர் கோரிக்கை



(மன்னார்)

மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையங்களின் குறைபாடுகளை சீர் செய்யுமாறு கோரி பெற்றோர் மன்னார் நகர சபையின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் நகர சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

மேற்படி விடயம் தொடர்பாக மன்னார் நகர எல்லைக்குள் அதிகளவான தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவது யாவரும் அறிந்ததே.

இந்தக் கல்வி நிலையங்களினால் மாணவர்கள் பெரும் பயனைப் பெற்று வருகின்றனர். பல மாணவர்கள் இந்த தனியார் கல்வி நிலையங்களை நம்பியே கல்வி கற்று வருவதுடன் பல மாணவர்கள் தூர இடங்களிலிருந்தும் இங்கு வந்து கல்வி கற்று வருகின்றனர்.

அந்த வகையிலே இந்தக் கல்வி நிலையங்களை நடாத்துபவர்களுக்கு எமது ஒத்துழைப்பையும் வழங்க வேண்டிய தேவையும் உள்ளது.

இருந்த போதும் இந்தக் கல்வி நிலையங்களில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுவதாக பல பெற்றோர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதில் மிக முக்கிய விடயமாக பல தனியார் கல்வி நிலையங்களில் குடிநீர் வசதியும், மலசல கூட வசதியும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே தங்களது சபையானது கல்விக்கு முக்கியத்துவமளித்து செயற்பட்டு வரும் இவ் நல்ல வேளையில் நகர சபைக்குட்பட்ட கல்வி நிலையங்களை பார்வையிட்டு இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தங்கள் சபையூடாக நடவடிக்கை எடுக்குமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பரீட்சையில் சித்தியடையாதோருக்கு மீள்பரீட்சைக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு


2011 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் நடைபெற்ற ஆசிரிய கலாசாலைப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறிய ஆசிரியர்களுக்காக மீள்பரீட்சை ஒன்றை இவ்வருடத்தில் நடாத்துவதற்குப் பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையூடாக ஏற்கனவே பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்யத் தவறியவர்கள் மற்றும் நூன சித்தி பெற்றவர்கள் மீள் பரீட்சைக்காக விண்ணப்பங்களை அனுப்பும் பொருட்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கலாசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் 021 2230323 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சரியான முறையில் செப்பனிடப்படாத யாழ் - பண்ணை காப்பெற் வீதி

## சிரமங்களுக்குள்ளாகும் மக்கள்



யாழ் - பண்ணை காப்பெற் வீதியில் உள்ளிறங்கிய பகுதிகள் மீண்டும் செப்பனிடப்பட்டு வருகின்றன. யாழ்ப்பண்ணைப் பாலம் வரையான பகுதி கடந்த காலப்பகுதியில் காப்பெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ் வீதியின் சில பகுதிகளில் வீதி உள்ளிறங்கியும் தார் வெளிக்கிளம்பியும் காணப்படுவதால் இந்த வீதியின் சில பகுதிகள் சமனற்ற நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இவ் வீதியால் பயணம் செய்வோர் சிரமத்தை எதிர்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது யாழ் - ஊர்காவற்றுறை வரையான வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டு வருவதுடன் மேற்படி வீதியின் உள்ளிறங்கிய பகுதிகள் மீண்டும் அகற்றப்பட்டு செப்பனிடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு காப்பெற் வீதியெனக் குறிப்பிட்டுப் போடப்பட்ட இந்த வீதிகள் சீரற்ற முறையில் செப்பனிடப்படாமல் போடப்பட்டதாகாவும் இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வரும் மக்கள் ஏனைய காப்பெற் வீதிகள் தொடர்பிலும் தமது நம்பிக்கையை இழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

(51)

# ஆண்டுக்கணக்காகக் குதிரைகள் கற்பனையில் ஓடிக்கொண்டிருக்கின்றன

'இனப்பிரச்சினையைத்
தீர்க்காமல்
இழுத்தடிக்கிறது
சிங்களத்தரப்பு' என்று
ஒரு வாய்பாட்டை
தமிழர்களாகிய நாங்கள்
ஆண்டுக்கணக்காகச்
சொல்லிக்
கொண்டிருக்கிறோம்.




எந்த ஆட்சி வந்தாலும் வரும் ஆட்சிகளெல்லாம் தமிழர்களுக்கு எதிராகவே இயங்குகின்றன. இப்படி இருக்கும்போது எப்படித் தமிழர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வை நீதியாகப் பெற்றுக்கொள்ள முடியும்?

ஆகவே, தமிழர்களாகிய நாங்கள் இந்தியாவையோ மேற்குலகத்தையோதான் நம்ப வேண்டியிருக்கிறது என்று நம்புகிறார்கள் பெரும்பான்மையான தமிழர்கள்.

அப்படித்தான் பெரும்பான்மைத் தமிழர்களையும் நம்ப வைத்திருக்கின்றன தமிழ்த்தரப்பின் அரசியற் சக்திகளில் பலவும் தமிழ் ஊடகங்களும்.

ஆனால், சிங்களத்தரப்பு இப்படித்தான் இருக்கும். சிலவேளை சிறிய அளவில் சில மாற்றங்களுக்கு உட்படும். அதற்கப்பால் பெரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் அவர்கள் தங்களுடைய யதார்த்தங்களின்படிதான் சிந்திப்பார்கள்.

அப்படியென்றால் இந்த இனப்பிரச்சினை என்ற நாறி மணக்கும் சடலத்தைப் புதைப்பதற்கு அல்லது இனப்பிரச்சினை என்ற தீராத நோயைக் குணப்படுத்துவதற்கு என்னதான் வழி?

இந்தியாவை – அதனுடைய உதவியை நாடலாம் என்றால், அதுவும் உருப்படியாக எதையும் செய்வதாகக் காணோம்.

இன்னும் சொல்லப்போனால் இந்தியா நம்பிக்கைக்கு விரோதமாகவே செயற்படுகிறது. ஏறக்குறைய அது தமிழர்களைக் கைவிட்டுவிட்டதைப் போலவே உள்ளது.

எனவே இந்த நிலையில் நாம் யாரை நம்புவது? யாருடைய உதவிகளை எதிர்பார்ப்பது? என்று கேட்கிறார்கள் இந்தத் தமிழ்க்குடிகள்.

இதில் பலரும் மேற்குலகத்தின் கடைக்கண் பார்வை தமிழர் மீது பதியும் என்ற நம்பிக்கையோடு – நப்பாசையோடு இருக்கிறார்கள்.

இதற்குக் காரணங்களும் உண்டு.

கணிசமான அளவு தமிழர்கள் மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்து இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதன்மூலமாக அந்த நாடுகளில் இன்று அவர்களுக்கு அறிமுகங்களும் அரசியல் இருப்பும் கிட்டியிருக்கிறது.

இப்படியான நிலையில் இவர்கள் ஈழத்தமிழர்களாகிய எங்களின் பிரச்சினைகளை அவ்வப்போது தாம் சந்திக்கின்ற – தமக்குத் தொடர்பிருக்கின்ற மேற்குலக ராஜதந்திரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் பேசுகிறார்கள்.

அவர்களும் சம்பிரதாயத்துக்காக 'இலங்கைத் தமிழர்களின் நிலைமையயிட்டு நாங்களும் கவலைப்படுகிறோம். இலங்கை அரசின் போக்குத் தவறானதுதான். நாங்கள் எங்களுடைய அரசின் மூலமாகவும் நாட்டின் தலைவர் மூலமாகவும் எங்கள் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களுடைய போராட்டம் நியாயமானதுதான்....' என்ற மாதிரிச் சொல்லி விடுவார்கள்.

இவ்வளவும் போதும் எங்களுடைய ஆட்களுக்கு.

இனியென்ன, பெரிய நாடுகள் எல்லாம் எங்களுக்கு ஆதரவு தருவதாகச் சொல்லி விட்டன. இலங்கை அரசின் கழுத்து இதோ பாருங்கள் நெரிக்கப்படுகிறது. தமிழர்களுக்கு இனிப் பொற்காலம் தான்' என்றெல்லாம் தங்களின் கற்பனைக் குதிரையைத் தட்டி விடுவார்கள்.

இப்படியே தமிழர்களுடைய கற்பனைக் குதிரைகள் ஆண்டுக்கணக்காகக் களைப்படையாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், தமிழர்களோ பழைய பெருங்காயப் பானைகளைப்போல, பழைய வரலாற்றுக் கனவுகளிலேயே மூழ்கிக் கொண்டு நிகழ்காலத்தை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில் ஒவ்வொரு தேர்தலின்போதும் திடசங்கற்பம் எடுத்துக்கொள்கிறார்கள், எப்படியென்றால் –

சிங்களவர்களுக்கு பாடம் படிப்பிப்போம். சர்வதேச உலகத்துக்கு நாங்கள் யார் என்று காட்டுவோம் என்று சொல்லிக்கொண்டு, தமிழ்த்தேசியவாத சக்திகளுக்காக வாக்களிக்கின்றார்கள்.

ஆனால், இந்தத் தமிழ்த்தேசியவாத சக்திகள் ஒருபோதுமே தமிழ்த்தேசியச் சக்திகளாகவோ, தமிழ் இனப்பற்றோடோ, தமிழ் மக்களின் மீதான கரிசனையோடோ செயற்படுவதில்லை.

இவை எப்பொழுதும் தமது சுயநலன்களின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன. அப்படிச் செயற்படும்போது அது தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் எதிரானதாகவே இருக்கிறது.

ஆனால், இதைப்பற்றி பெரும்பான்மைத் தமிழர்களுக்கு கவலையே இல்லை. அவர்களைப் பொறுத்தவரை தமது மூக்குப்போனாலும் பரவாயில்லை. எதிரிக்குச் சகுனம் பிழைத்தால் சரி என்ற எண்ணத்தோடிருப்பவர்கள்.

அப்படித்தான் இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினை விவகாரமும் அதனுடைய தீர்வும் உள்ளது.

தமக்கு மூக்குப்போனாலும் பரவாயில்லை. எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேணும் என்ற கணக்கில்.

இப்படிச் சிந்திக்கின்ற ஒரு மக்கள் திரளினால் எப்படி விடுதலையைப் பெற முடியும்? எப்படி முன்னேற முடியும்? எப்படி வெற்றியடைய முடியும்?

- ம. அய்யம்பிள்ளை

உழைப்பவனின் காலம் பொன் ஆகுகிறது. உழைக்காதவனின் பொன் காலமாகுகிறது. - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கூட்டமைப்பு என்ன செய்கிறது?

ஊழலுக்கு எதிரான யுத்தம் ஓயப்போவதில்லை என்று முழங்கியிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கரமசிங்க. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊழலை அகற்றவே பதவி ஏற்றுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

100 நாள் வேலைத்திட்டத்தின் கால எல்லை முடிந்த அன்றிரவு தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி சிறிசேன, நாட்டின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

ஊழலை ஒழித்தல், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் எல்லாம் நிச்சயம் செய்யப்பட வேண்டியவையே. அதுவும் 'நல்லாட்சி' உறுதியை அளித்துவிட்டு, அவற்றைச் செய்யாமல் விட்டுவிட முடியாது.

ஆனால், ஊழலை ஒழிக்க முயற்சிகளைச் செய்கிறோம், ஜனநாயகம் மனித உரிமைகளைப் பாதுகாக்க பாடுபடுகிறோம் என்று சொல்லிக்கொண்டு, 100 நாள் வேலைத்திட்டத்தில் வாக்குறுதியளித்தபடி அதற்கான சட்டங்களை நிறைவேற்றாததை மறைத்து சடையக் கூடாது.

ஊழல் ஒழிப்பு, ஜனநாயகம், மனிதஉரிமை காப்புக்கெல்லாம் 19வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவது அவசியம் என்று சொல்லிவிட்டு, அதைச் செய்யாமல் விட்டதற்கு வேறேதும் சாட்டுகளைச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

தற்போதைய தேர்தல் முறையினால் ஊழல்களும், மக்களுக்குச் சேவையாற்றுபவர்கள் பிரதிநிதிகளாக வரமுடியாமல் போவதும் உள்ளதைக் கண்டுகொண்டே தேர்தல் முறை மறுசீரமைப்பு வாக்குறுதியும் அளிக்கப்பட்டது. அதுவும் செய்யப்படவில்லை.

கடந்த 23ஆம் திகதி நள்ளிரவுடன் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றும் 100 நாள் திட்ட நல்லாட்சி வாக்குறுதியில் சொல்லப்பட்டது. அதுவும் நடக்கவில்லை. ஆனால் பிரதமரும் ஜனாதிபதியும் ஊழலுக்கெதிராக யுத்தம் செய்தல் மனித உரிமைகளைக் காப்பாற்றுதல் என வாய்ப்பந்தலிடுகிறார்கள்.

முன்னாள் ஆட்சியாளர்களை விசாரணை செய்வதும் சிறையில் அடைப்பதும்தான் இந்த அரசாங்கத்தின் நல்லாட்சி வேலையாக காட்டப்படுகிறது. ஆனால் அதனால் மட்டும் எதிர்காலத்தில் ஊழலற்ற, ஜனநாயகம் மனித உரிமைகள் பேணும் நிலைமை நாட்டில் வந்துவிடுமா?

அதையும்விட, இந்த நாட்டின் இனங்களுக்கிடையே சௌஜன்ய உறவை நிலைநாட்டுவதை முக்கிய விடயமாகக் கருதி வாக்குறுதியளித்திருந்த தலைவர்கள் அதற்கான எந்த முயற்சியிலும் ஈடுபடுவதாகத் தெரியவில்லையே ஏன்?

நாட்டில் இப்போது உள்ளது இரு பிரதான கட்சிகளும் இணைந்த தேசிய அரசாங்கம்தானே. நல்லாட்சி ஜனாதிபதியிடம் இன்னமும் நிறைவேற்று அதிகாரங்கள் வேறு இருக்கிறது. இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டுவதற்கு இதைவிட சாதகமான சூழல் எதிர்காலத்தில் வருமா?

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகச் சொல்லிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் – எதிர்காலத்தில் என்ன மாதிரியான சூழ்நிலை வரும், எவ்வாறு தீர்வைக் காணலாம் என்று கற்பனை செய்துகொண்டு இப்போது வாளாவிருக்கிறார்கள்?

நல்லாட்சி அரசாங்கத்தினர் நாட்டில் ஊழல் ஒழிப்பு மனித உரிமை ஜனநாயகக் காப்பு முயற்சிகளைச் செய்துகொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கலாம்.... இனப்பிரச்சினைத் தீர்வு இப்போதைக்கு அவசரமோ முக்கியமோ இல்லை என்பதுதான் த.தே.கூ. வினதும் நிலைப்பாடா?

"தேசிய நிறைவேற்றுச் சபை தீர்வைக் கொண்டுவரும்" என்று ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பட்டாடோபமாகப் பேசிய சுமந்திரன் எம்பி, "2015–ல் தீர்வு நிச்சயம்" என்று முழங்கிய த.தே.கூ. தலைவர் சம்பந்தன் ஆகியோர் இப்போது எங்கு ஒளிந்திருக்கிறார்கள்?

- ஆசிரியர்

# முல்லை அரச ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்காதது ஏன்?

## • சமூக ஆர்வலர்கள் கேள்வி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அரச செயலகங்களில் 25 வருடங்களாக சேவையாற்றும் பலருக்கு இடமாற்றம் வழங்கப்படாமையால் பொதுமக்களுக்கான வினைத்திறனான சேவை பாதிக்கப்படுகிறது என்று அந்த மாவட்டத்தைச் சேர்நந்த சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்களில் தொடர்ச்சியாக ஏழு வருடங்களுக்கு மேல் பணியாற்றி வரும் பதவி நிலை உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர் என சகல பணிநிலை மட்டங்களிலும் இட மாற்றங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். மேற்குறித்த செயலகங்களில் தொடர்ச்சியாக ஒரே அலுவலகத்தில் 25 வருடங்களாக சேவையாற்றிவரும் அலுவலர்களும் உள்ளார்கள் என்றும், ஒரே அலுவலகத்தில் ஒரே கிளைகளில் குடும்ப உறவுகளாகவும் பலர் கடமையாற்றி வருகின்றனர் எனவும் குற்றம் சாட்டப்படுகிறது.

கடந்த காலங்களில் இவ்வாறனவர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டபோதும், தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக ஒரே அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாகாண அரசின் கீழும் இயங்கும் சகல திணைக்களங்களிலும் தொடர்ச்சியாக 7 வருடங்களுக்கு மேல் சேவையாற்றும் சகல பணி நிலை அலுவலர்க்கும் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

# வடக்கு கடலில் அத்துமீறி மீன் பிடிக்க வேண்டாம்

## இந்திய மீனவர்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களுக்கு இலங்கை அரசாங்கம் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவர் என அரசாங்கம் மீளவும் அறிவித்துள்ளது. சட்டவிரோதமான முறையில் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கைது செய்து அவர்களின் உடமைகளைப் பறிமுதல் செய்யுமாறு இலங்கைக் கடற்படையினருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட அனுமதியளிக்குமாறு இந்திய மீனவர்கள் வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுராஜிடம் அண்மையில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக் கடற்பரப்பில் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களைக் கைது செய்யுமாறு கடற்படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். வருடாந்தம் 83 நாட்கள் மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்குவதாக எப்போதும் தெரிவிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மலையக ஆசிரிய நியமனம் மீண்டும் ஒத்திவைப்பு

அரசியலமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவிருப்பதால், பெருந்தோட்ட பாடசாலைகளுக்கென 3021 ஆசிரிய உதவியாளர்களை நியமிக்கும் உத்தியோகபூர்வ வைபவம் 28 ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இம்முறை ஆசிரிய உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கு 14,174 பேர் தோற்றியிருந்ததுடன் 9,072 பேரே சித்திபெற்றனர். இதனடிப்படையில் 5,102 பேர் சித்திபெறத் தவறியுள்ளனர். இதிலிருந்து 9072 பேர் தகுதி பெற்று அவர்களிலிருந்து 3021 பேர் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கே இவ் ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# கண்ணி அகற்றும் பணியாளர் போராட்டம்

கிளிநொச்சியில் ஹலோ ட்ரஸ்ட் கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றிய நூற்றுக்கணக்கான ஊழியாகள் நேற்றுக்காலை முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கண்ணி வெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வந்த பணியாளர்களில் 200 பணியாளர்களைத் தவிர ஏனைய 450 பணியாளர்கள் நிதியின்மையால் வேலையில் இருந்து நிறுத்தப்படவுள்ளதாக ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து குறித்த பணியாளர்கள் நேற்று நிறுவனத்திற்கு முன் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இருக்கின்ற நிதிக்கமைய அனைத்து பணியாளர்களுக்கும் ஒரே காலத்தில் வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து குறித்த ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (29)

# மின்னல் தாக்கி ஒருவர் பலி

கற்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட துரையடி பகுதியில் மின்னல் தாக்கியதில் நேற்றுக்காலை குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந் துள்ளதுடன், இளைஞர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இருவரும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு கரைக்கு திரும்பிய போதே மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய குமார் தல்மேதா எனும் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

சடலம் கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் இதன் போது காயமடைந்த இளைஞன் கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# கொம்மாதுறையில் மோட்டார் குண்டு மீட்பு

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கொம்மாதுறை படை முகாமுக்கருகிலிருந்து சனிக்கிழமை மதியம் மோட்டார் ஷெல் ஒன்று மீட்கப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி படை முகாமுக்கு அருகிலுள்ள சித்தி விநாயகர் வித்தியாலய விளையாட்டுத் திடலைச் சூழவுள்ள முட்கம்பி வேலிப் பற்றைக்குள்ளேயே இந்த மோட்டார் ஷெல் காணப்பட்டுள்ளது. மோட்டார் ஷெல் காணப்படுவதாக தங்களுக்கு கிடைத்த தகவலின்படி உடனடியாக ஸ்தலத்துக்குச் சென்று மோட்டார் குண்டை மீட்கும் பணியில் ஈடுபட்டதாக பொலிஸார் கூறினர். குண்டு செயலிழக்கச் செய்யும் படை அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு இந்த மோட்டார் ஷெல் மீட்கப்பட்டது. குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் மேற்படி மோட்டார் ஷெல்லை மீட்டு, பாதுகாப்பாக செயலிழக்கச் செய்வதற்காக அங்கிருந்து கும்புறு மூலை படை முகாமுக்கு எடுத்துச் சென்றனர். இது விடயமாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# துரோகிகளை இனங்காட்டுகின்றார் வடமாகாண முதலமைச்சர்



**இராணுவப் பிரசன்னம், காணி அபகரிப்பு என்று பேசப்படுகின்ற சகல பிரச்சினைகளும் இனப்பிரச்சினை தீராமலிருப்பதன் விளைவுகள். இனப்பிரச்சினை தீரும் பட்சத்தில் இப்பிரச்சினைகள் இருந்த இடம் தெரியாமல் மறையக் கூடியவை. இது கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியாமலில்லை. தெரிந்து கொண்டும் இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை செலுத்தாமல் மற்றைய பிரச்சினைகள் பற்றியே அடிக்கடி பேசுகின்றார்கள். நோயை அறிந்து வைத்தியம் செய்யாமல் அதன் பக்க விளைவுகளுக்குப் பரிகாரம் தேடும் வைத்தியரைப் போல நடந்து கொள்கின்றார்கள். இது ஏன் என்று தமிழ் மக்கள் இப்போதாவது நிதானமாகச் சிந்திக்க வேண்டும்.**

## சங்கர சிவன்

தமிழ் அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் துரோகிகள் என்று தூற்றப்பட்டவர்களின் பட்டியல் பெரிது. தமிழரசுக் கட்சியே எல்லோருக்கும் துரோகி முத்திரை குத்தியது. தங்களுடன் இணங்கிப் போகாத எல்லோரும் இவர்களுக்குத் துரோகிகள். ஜீ.ஜீ. பொன்னம்பலத்தைத் துரோகி என்று மேடைக்கு மேடை வசை பாடினார்கள். தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைத்ததும் வசை பாடல் நின்றது. ட்ரயல் அற் பார் வழக்கில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தனது திறமையை வெளிப்படுத்தி அமிர்தலிங்கத்துக்கு விடுதலை பெற்றுக் கொடுத்ததும் தலையில் தூக்கி வைத்து தலைவர் என்று கொண்டாடினார்கள்.

கருத்து வேறுபாடு காரணமாகத் தமிழரசுக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் எல்லோரும் இவர்களுக்குத் துரோகிகள். வ. நவரத்தினம், செ. கோடீஸ்வரன், எம். பாலசுந்தரம், சீ.எக்ஸ்.மாட்டின், செல்லையா இராசதுரை என்று பட்டியல் நீள்கின்றது. கிரியாவின் தமிழ் அகராதி துரோகம் என்பதற்குத் தரும் விளக்கத்தின்படி பார்த்தால் தமிரசுக் கட்சியிலேயே துரோகம் ஆரம்பிக்கின்றது. நம்பிக்கைக்கும் நலனுக்கும் மாறாக அல்லது எதிராக செயற்படுபவர்களே துரோகிகள் என்பது கிரியா அகராதி தரும் விளக்கம். அதாவது மக்களின் நம்பிக்கைக்கும் நலனுக்கும் மாறாகவோ எதிராகவோ செயற்படுபவர்கள் துரோகிகள். தமிழரசுக் கட்சி முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை தமிழ் மக்களின் நம்பிக்கைக்கும் நலனுக்கும் மாறாகவும் எதிராகவுமே செயற்பட்டிருக்கின்றன.

சமஷ்டித் தீர்வைப் பெற்றுத் தருவதாக மக்களுக்கு நம்பிக்கையை வளர்த்துவிட்டு அதற்காக உரிய முறையில் செயற்படாமல் சுயநல அரசியல் நடாத்தியது துரோகமில்லையா? தனிநாடு பற்றிய நம்பிக்கையை மக்களிடம் வளர்த்துவிட்டு மாவட்ட சபையுடன் முடங்கிப் போனது துரோகமில்லையா? ஐந்து வருடங்களுக்கு மேலாகத் தமிழ் மக்களின் நலனுக்காக எதுவும் செய்யாமல் தொடர்ந்து அவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பின் செயல் துரோகமில்லையா?

மன்னார் ஆயரின் பிறந்த தின நிகழ்வில் உரையாற்றிய வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிந்தோ, அறியாமலோ பூனையைக் கோணிப் பையிலிருந்து வெளியே விட்டுவிட்டார். கூட்டமைப்பின் துரோகத்தை அம்பலப்படுத்திவிட்டார். புலம்பெயர் தமிழ் பேசும் மக்களும் உள்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களும் மன்னார் ஆயரின் தலைமையின் கீழ் இணைந்து எங்களுக்கு எவ்வாறான தீர்வு தேவை என்பதைத் தீர்மானித்து வெளியிடவேண்டும் என்று அந்த நிகழ்வில் அவர் கூறினார். இனப்பிரச்சினையின் தீர்வை பொறுத்த வரையில் கூட்டமைப்பிடம் எந்தக் கொள்கையும் இல்லை என்பதையும் இனிமேல் தான் ஒரு கொள்கையைத் தீர்மானிக்க வேண்டும் என்பதையும் தெளிவாகக் கூறியிருக்கின்றார். இனப்பிரச்சினையின் தீர்வுக்கான எந்தக் கொள்கையும் இல்லாமல் வெற்றுக் கோஷங்களின் மூலமும் போலியான நம்பிக்கைகளை வளர்த்தும் கூட்டமைப்பு மக்களை ஏமாற்றி வந்திருக்கின்றது. மக்களின் நம்பிக்கைக்கு மாறாகவும் நலன்களுக்கு எதிராகவும் செயற்பட்டிருக்கின்றது.

கூட்டமைப்புக்குத் தங்கள் வாக்குகளை அள்ளிக் கொடுத்த மக்கள் கூட்டமைப்புத் தலைவர்கள் தங்களுக்கு நம்பிக்கைத் துரோகமாக நடந்திருக்கின்றார்கள் என்பதை இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையை மக்களிடம் வளர்த்தார்கள். சர்வதேசம் கூர்மையாக அவதானிக்கின்றது என்றும் (மாவை), தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்றும் (சம்பந்தன்) ஒவ்வொரு தேர்தல் மேடையிலும் பேசினார்கள். இவர்களுடைய ஆவேசப் பேச்சுப் பாணி மக்களிடம் நம்பிக்கையை வளர்த்தது. தேர்தல் முடிந்தவுடன் சர்வதேசம் வந்து தீர்வைப் பெற்றுத் தரும் என்று மக்கள் உண்மையாகவே நம்பினார்கள். தீர்வு என்னவென்று தலைவர்களுக்கே தெரியாது என்பது மக்களுக்கு அப்போது விளங்கவில்லை. சர்வதேசம் தீர்வைப் பெற்றுத் தருவது ஒருபோதும் நடக்காது என்று கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். அப்படியிருந்தும் பொய்யான நம்பிக்கையை மக்களிடம் வளர்த்து ஏமாற்றினார்கள். ஐந்து வருடங்களுக்கு மேலாக இனப்பிரச்சினையின் தீர்வைப் புறந்தள்ளிச் செயற்படுவதன் மூலம் தமிழ் மக்களின் பிரதான நலனுக்கு மாறாக நடக்கின்றார்கள். இது தமிழ் மக்களுக்கு இவர்கள் செய்யும் துரோகம்.

இனப்பிரச்சினையின் தீர்வு தமிழ் மக்களின் பிரதான நலன். இராணுவப் பிரசன்னம், காணி அபகரிப்பு என்று பேசப்படுகின்ற சகல பிரச்சினைகளும் இனப்பிரச்சினை தீராமலிருப்பதன் விளைவுகள். இனப்பிரச்சினை தீரும் பட்சத்தில் இப்பிரச்சினைகள் இருந்த இடம் தெரியாமல் மறையக் கூடியவை. இது கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியாமலில்லை. தெரிந்து கொண்டும் இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை செலுத்தாமல் மற்றைய பிரச்சினைகள் பற்றியே அடிக்கடி பேசுகின்றார்கள். நோயை அறிந்து வைத்தியம் செய்யாமல் அதன் பக்க விளைவுகளுக்குப் பரிகாரம் தேடும் வைத்தியரைப் போல நடந்து கொள்கின்றார்கள். இது ஏன் என்று தமிழ் மக்கள் இப்போதாவது நிதானமாகச் சிந்திக்க வேண்டும்.

இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கை கூட்டமைப்பிடம் இல்லாதிருப்பது தற்செயலானதல்ல. கூட்டமைப்புத் தலைமை இனப்பிரச்சினை தீர்வதை விரும்பவில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமலே தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தங்கள் பதவிகளைக் காப்பாற்றுவதே அவர்களின் நோக்கம். இந்த நிலைப்பாட்டிலிருந்து அவர்களால் ஒருபோதும் விடுபட முடியாது. இவர்கள் புலம்பெயர் அமைப்புகளுக்குக் கட்டுப்பட்டிருப்பது ஒரு காரணம். மேட்டுக்குடி நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பது மற்றைய காரணம்.

**சர்வதேசம் கூர்மையாக அவதானிக்கின்றது என்றும் (மாவை), தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்றும் (சம்பந்தன்) ஒவ்வொரு தேர்தல் மேடையிலும் பேசினார்கள். இவர்களுடைய ஆவேசப் பேச்சுப் பாணி மக்களிடம் நம்பிக்கையை வளர்த்தது. தேர்தல் முடிந்தவுடன் சர்வதேசம் வந்து தீர்வைப் பெற்றுத் தரும் என்று மக்கள் உண்மையாகவே நம்பினார்கள். தீர்வு என்னவென்று தலைவர்களுக்கே தெரியாது என்பது மக்களுக்கு அப்போது விளங்கவில்லை. சர்வதேசம் தீர்வைப் பெற்றுத் தருவது ஒரு போதும் நடக்காது என்று கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். அப்படியிருந்தும் பொய்யான நம்பிக்கையை மக்களிடம் வளர்த்து ஏமாற்றினார்கள்.**

புலிசார்புப் புலம்பெயர் அமைப்புகள் இன்றும் தனிநாட்டுக் கனவிலேயே மிதந்து கொண்டிருக்கின்றன. இலங்கையில் இனப்பிரச்சினை தீராமல் தொடர்வது தனிநாட்டுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் என்று இவை கனவு காண்கின்றன. இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சாதகமாக எதுவும் செய்யக் கூடாது என்று இவை கூட்டமைப்புக்கு வேண்டுகோள் (கட்டளை) விடுத்திருக்கின்றன. கூட்டமைப்புத் தலைமை அதை அப்படியே நிறைவேற்றுகின்றது. புலம்பெயர் அமைப்புகள் தொடர்ச்சியாக வழங்கும் நிதியுதவிக்குக் கூட்டமைப்பு நன்றிக் கடன் செலுத்துகின்றது.

உள்ளூர் மேட்டுக் குடியினரின் பிரதிநிதியாகவே கூட்டமைப்பு செயற்படுகின்றது. மேட்டுக்குடி நலன்களின் பாதுகாவலர்களாகவே இவர்கள் இருக்கின்றார்கள். அதனால்தான் வறிய மக்களின் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளில் கூட்டமைப்புத் தலைமை தலையிடுவதில்லை. வீடில்லாப் பிரச்சினை, காணியில்லாப் பிரச்சினை போன்றவற்றினால் பாதிக்கப்படுபவர்களாக ஏராளம் வறிய மக்கள் தமிழ்ப் பகுதிகளில் வாழ்கின்றார்கள். இனப்பிரச்சினையைக் காட்டியே இவர்களின் வாக்குகளைக் கூட்டமைப்புப் பெறுகின்றது. இனப்பிரச்சினை தீர்ந்தால் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக் கூடாகவே இம்மக்களை அணுகவேண்டி ஏற்படும். அது மேட்டுக்குடி நலன்களுடன் முரண்படுவதாக அமைந்து விடும் என்பதால் இனப்பிரச்சினையின் தீர்வைக் கூட்டமைப்பு விரும்பவில்லை.

இனப்பிரச்சினையின் தீர்வைப் புறந்தள்ளுவதை வெளிப்படையாகக் காட்டினால் அரசியலில் நிலைக்க முடியாததென்பதால் இனப்பிரச்சினையில் கவனம் செலுத்துவதாகப் பாசாங்கு செய்து கொண்டு மற்றைய பிரச்சினைகள் பற்றியே அடிக்கடி பேசுகின்றார்கள். இனப்பிரச்சினை தீராமல் தொடரும் நிலையை உருவாக்கினால் எப்போதும் மற்றைய பிரச்சினைகள் இருக்கப் போகின்றன என்றும் அவற்றைக் காட்டியே தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறலாம் என்றும் கூட்டமைப்பினர் கருதுகின்றனர். இப்படியாகத் தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றுகின்றார்கள்.

தமிழ் மக்களின் நலனில் கூட்டமைப்புக்கு உண்மையாகவே அக்கறை இருக்குமானால் நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து அதன் அடிப்படையில் செயற்படவேண்டும். இனப்பிரச்சினையின் தீர்வை விரும்பாத கூட்டமைப்பு ஒருபோதும் அதைச் செய்யப்போவதில்லை. தமிழ் மக்கள் இதை விளங்கிக் கொண்டு கூட்டமைப்பின் ஏமாற்று நாடகத்துக்கு முற்றுப்புள்ளி போடத் தயாராக வேண்டும்.

# காணாமற்போனோர் விவகாரம்

# மேலதிக விசாரணைக்கு ஏற்பாடு

## விசேட குழுக்களை அமைக்கவும் அனுமதி



காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றில் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக நான்கு விசாரணைக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் தகவலை உறுதிப்படுத்திய ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம இதற்கான அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் எனவும், இதன் பிரகாரம் உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் பணி விரைவில் ஆரம்பமாகும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, காணாமற்போகச் செய்யப்பட்டோர் விவகாரம் சம்பந்தமாக படையினருககு எதிராக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது பற்றியும் விசாரிக்க தனிக் குழு அமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்பட்டவில்லை. மேற்படி விவகாரம், தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழுவும் அதற்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர்கள் குழுவும் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அறியமுடிகிறது.

1983 ஆம் ஆண்டு முதல் போர முடிவடையும்வரை வடக்கு, கிழககில் காணாமற்போகச் செய்யப்பட்டோர் சம்பந்தமாக விசாரணைகளை நடாத்துவதற்கு மகிந்த ஆட்சியின்போது மூவரடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது.

இதன் தலைவராக மெக்ஸ்வெல் பரணகம நியமிக்கப்பட்டார். காலப்போக்கில் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகவும விசாரணை நடாத்தும் வகையில் இந்த ஆணைக்குழுவின் விடயப்பரப்பை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விஸ்தரித்து, அதற்கு ஆலோசனை வழங்குவதற்கு சர்வதேச நிபுணர்கள் குழுவொன்றையும் அமைத்திருந்தார்.

ஆட்சி மாற்றத்தின் பின்பும் இந்த குழுவின் பணியை தொடரவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புதல் வழங்கியதுடன், அதன் ஆயுட்காலத்தையும் நீடித்தார். இந்நிலையில், காணாமற்போகச் செய்யப்பட்டோர் சம்பந்தமாக முறைப்பாடுகளைத் திரட்டிவந்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது இடைக்கால விசாரணை அறிக்கையை அண்மையில் ஜனாதிபதியிடம் கையளித்தது.

இதில் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றி விவரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு ஆணைக் குழுவால் திரட்டப்பட்ட முறைப்பாடுகளின் நம்பகத்தன்மை பற்றி ஆராய்ந்து - அது பற்றி முழுமையாக விசாரணை நடத்தி நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்யும் வகையிலேயே நான்கு விசாரணைக் குழுக்கள் விரைவில் நியமிக்கப் படவுள்ளன.

# • 19 ஆம் திருத்தத்தில் ஊடகவியலாளருக்கு ஆப்பு

## ரஜீவ சொல்கிறார்



அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் நிறுவன பிரதானிகளை சட்டத்தின் முன் கொண்டு வரும் வகையிலான யோசனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி குற்றவியல் குற்றச்சாட்டுகளின் கீழ் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக பிரதானிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்கப்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

முதலில் வந்த திருத்தத்தில் அரச அதிகாரிகள் மட்டுமே தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் அரசாங்கத்தின் கீழாக இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் பின்னர் அதில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# இந்திய படகுகள் மீண்டும் ஒப்படைப்பு

இலங்கையில் சிறைப்பிடித்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களின் 16 படகுகள் மீட்கப்பட்டு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இராமேசுவரம் கொண்டுவரப்பட்டன.

இராமேசுவரம் உள்ளிட்ட தமிழகப் பகுதிகளிலிருந்து கடலுககு மீன் பிடிக்கச் சென்ற 86 படகுகளை இலங்கை கடற்படை சிறைப்பிடித்து வைத்திருந்தது.

இவை அனைத்தையும் விடுவிக்குமாறு இலங்கை அரசு பெப்ரவரி 26 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது. இதைத் தொடர்ந்து முதல்கட்டமாக மீட்புக் குழுவினர் மார்ச் மாதம் 34 படகுகளை மீட்டு வந்தனர்.

இந்த நிலையில், 2 ஆவது கட்டமாக இராமேசுவரம், புதுக்கோட்டை, மண்டபம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் 143 பேர் கொண்ட மீட்புக் குழுவினர் மீதமுள்ள படகுகளை மீட்பதற்காக கடந்த 22 ஆம் திகதி 18 படகுகளில் இலங்கைக்கு வந்தனர்.

இவர்கள், இலங்கையில் தலைமன்னார், காரைநகர் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 16 படகுகளையும், அதில் இருந்த மீன்பிடி சாதனங்களையும் மீட்டு இராமேசுவரத்துக்கு கொண்டு வந்து சேர்த்தனர் என தமிழக ஊடகமான தினமணி குறிப்பிட்டுள்ளது.

இலங்கை கடற்படை சிறைப்பிடித்து வைத்திருந்த தமிழக மீனவர்களின் 86 படகுகளில் இதுவரை 50 படகுகள் மீட்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 36 படகுகள் மீட்க முடியாத நிலையில் இலங்கையிலேயே உள்ளன

# இறக்குமதி வரி திடீர் அதிகரிப்பு

உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் மீதான இறக்குமதி வரிகள் உயர்த்தப்பட்டுள்ளன 'என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

ஒரு கிலோ உருளைக்கிழங்குக்கான வரி 40 ரூபாவிலிருந்து 55 ரூபாவாகவும், ஒரு கிலோ பெரிய வெங்காயத்துக்கான வரி 10 ரூபாவிலிருந்து 30 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்தார்.

உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கும் பொருட்டு விவசாய அமைச்சர் துமிந்த திஸநாயக்கவினால் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# உலகின் மிகப்பெரிய புத்தர் சிலை குருநாகலில்

உலகிலேயே மிகப் பெரிய புத்தர் சிலையொன்று குருணாகல் தொடம்கஸ்லந்த புரானரம்படகல்லை மொனராகல விகாரையில் திரைநீக்கம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த திரைநீக்க நிகழ்வில் பிரதம மகாசங்கத்தினர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

# வலுவடையும் சீன உறவு பல்துறை அபிவிருத்திக்கு இணக்கம்

பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி ஆகிய துறைகளில் வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்கு அரசாங்கம் சீனாவிற்கு நன்றி தெரிவித்துள்ளது.

சீனத் தூதுவர் யீ ஷியாங் லியாங் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன ஆகியோருக்கு இடையில், அமைச்சில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன்போது சீன அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு விடயத்தில் சீனா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது. அரச படைகளுக்குத் தேவையான கனரக ஆயுதங்கள் மற்றும் படையினருக்கான பயிற்சிகளை வழங்கியதாலேயே தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்க முடிந்ததாகவும் அமைச்சர் விஜேவர்தன சீனத் தூதுவரிடம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் உடபட பாரிய அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு சீனா பாரிய உதவிகளை வழங்கிவருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிககாலத்தில் சீனாவின் ஆதிக்கம இலங்கையில் அதிகரித்திருந்தமை தொடர்பில் அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் கடும் விசனம் அடைந்திருந்திருந்தன.

# வங்கிக்கணக்குகளை ஆராய உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட சிரிலிய சவிய வங்கி கணக்குகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை சோதனையிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தினால் பொலிஸ் நிதி குற்றத்தடுப்பு பிரிவிற்கு இவ் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு வங்கிக் கணக்குகளின் ஊடாக குறித்த கணக்கு இலக்கத்திற்கு பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், காசோலைகளை பயன்படுத்தி பல்வேறு வங்கி கிளைகளில் பணமாக்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# அடம் பிடிக்காமல் பூரண ஒத்துழைப்பு



முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குகிறார் என்று பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

சட்டத்தின் பிடியிலிருந்து எவரும் தப்பமுடியாது. சட்டமானது அனைவருக்கும் சமமான முறையிலேயே இயங்கவேண்டும். அந்தவகையில், அமைச்சர்கள், எம்.பிக்கள், பிரமுகர்கள் ஆகியோருக்கு சிறைச்சாலைகளில் சலுகைகள் வழங்கப்படுகின்றமை அசாதாரணமாகும் எனவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார். "திவிநெகும நிதி மோசடி சம்பந்தமாக பஸில் ராஜபக்ஷவிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றன. விசாரணை என்பது கட்டாயமாகும். சட்டத்தை யாவரும் மதிக்கவேண்டும்.

விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அந்த வகையில், பஸில் ராஜபக்ஷ விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறார்.

அவர் அச்சம் கொள்ளவில்லை. எனினும், ஏனைய சிலர் விசாரணைகளுக்கு முகங்கொடுக்காமல் சட்டத்தின் பிடியில் இருந்து பாய்ந்து செல்ல முற்படுகின்றனர். இதற்காக நாடாளுமன்றத்தைக்கூட பயன்படுத்துகின்றனர்.

இதேவேளை, விரைவில் 19 மீது விவாதம் நடத்தப்படும். இதில் ஜனநாயகத்திற்குரிய பல அம்சங்கள் இருக்கின்றன அத்துடன், தேர்தல் முறைமை மாற்றம் உறுதிமொழியையும் நாம் நிறைவேற்றுவோம். இதை ஆராயாமல் - கருத்துகளை உள்வாங்காமல் செய்தால் சிறு கட்சிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அது எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்றார்.

# சுற்று நிருபங்களை அமுல்படுத்த பணிப்பு

அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களை செயற்படுத்தாத அரச துறை நிறுவனம் மற்றும் அதன் ஊழியர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி செயலாளர் பி.பீ.அபயகோன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வெளியிடப்படும் சுற்றுநிருபங்களை செயற்படுத்த அவர்கள் கடமைப்பட்டுள்ளதாகவும், செயற்படுத்தாமல் இருப்பது சட்டப்படி குற்றம் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# குடியிருப்பு பகுதியில் குப்பைகள் சந்திரகுமார் எம்.பி.யிடம் முறைப்பாடு

(பரந்தன்)

பரந்தன் உமையாள்புரம் மக்கள் குடியிருப்புக்குள் தனியாரின் காணிகளில் கரைச்சி பிரதேசசபையினரும் இராணுவத்தினரும் குப்பைகளைக் கொட்டுவதால் அப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் பாரிய சுகாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுதது வருவதாக நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமாரிடம் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். குப்பை கொட்டுவதற்கென பிரதேச சபை உரிய இடத்தை இனம் காட்டாததன் விளைவாகவே இவ் அவலம் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர.

இதணையடுதது உமையாள்புரம பகுதிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாருடன் மக்கள் உரையாடும் போதே இவ்விடயம் தொடர்பில் அவரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதுதொடர்பில் மக்கள் மேலும் குறிப்பிடுகையில்,

பிரதேச சபையினரால் கழி பொருட்கள்ளை கொட்டுவதற்கென ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட இடம் ஏ9 வீதியிலிருந்து சுமார் 1.5 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் அமைநதிருக்கின்றது ஆனால் குப்பைகளை ஏற்றிவரும் பிரதேச சபைக்குரிய வாகனங்கள் அங்கு செல்வதில்லை மாறாக ஏ9 வீதியிலிருந்து 400 மீற்றர் தூரத்திற்குள் உள்ள மக்களின் காணிகளிலேயே அவர்கள் குப்பைகளைக் கொட்டுகின்றனர் அத்தோடு இராணுவத்தினரும் மலக கழிவுகளை அவ்விடத்தில் கொண்டுவந்து கொட்டுகின்றனர்.

குப்பைகளை கொட்டுவதற்கென ஒதுக்கப்பட்ட பகுதியை அடையாளம் காட்டுவதற்குரிய குறிகாட்டிகள் எதுவும் அமைக்கப்படவில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தவைவர் மனோகரன், கழிவுப் பொருட்களை கொட்டுவதற்கென இடம் தெரிவுசெய்யப்பட்டு பல இலட் சம் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டு இடத்தை சீரமைப்பதற்கான வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன ஆனாலும இடத்தை இனம் காட்டுவதற்கான குறிகாட்டிப் பலகைகள் பொருத்தப்படாததனால் குப்பைகள் அங்கு கொண்டு செல்லப்படுவதில்லை எனவே தொடர்நதும் மக்களின் காணிகளுக்குள் குப்பைகள் கொட்டப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் பிரதேசசபைகள் தமது கடமைகளைச் சரிவர மேற்கொள்ளாததன் விளைவாக மக்கள் தொடர்ந்தும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றமை வேதனைக்குரியது எனவே குறித்த பகுதியில் குறிகாட்டிப்பலகைகளை அமைப்பதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம என தெரிவித்தார்.

இதேவேளை உமையாள்புரம பகுதியில் புனரமைக்கப்பட்டுவரும் உள்ளக வீதிகளின் வேலைகள் தாமதப்படுத்தப்படுவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வது குறித்தும் மேலும் பிரதேசத்தின் நிலத்தோற்றத்திற்கு ஏற்ப வீதிப்புனரமைப்புப்பணிகள் முன்னெடுக்கப்படாமை மற்றும் சில குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படாமை தொடர்பாகவும் மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இக்கலந்துரையாடலின்போது, வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதனும் உடனிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தவில் மேதையின் சிரார்த்த தினம்



(யாழ்ப்பாணம்)

உலகத் தவில்மேதை அமரர் லயன் ஞானசூர தட்சணாமூர்த்தியின் 40 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு சூழகம் அமைப்பின் அனுசரணையுடன் அளவெட்டிப்பகுதியில் உள்ள பொது இடங்களில் மரங்களை நடும் செயற்றிட்டம் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதன் போது அருணோதயக்கல்லூரியில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர், மற்றும் சூழகம் அமைப்பினர் மரங்களை நடுவதைக் காணலாம்.

# அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு புதிய ஞாபகார்த்த மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இம் மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை முற்பகல் 11.30 மணியளவில் தந்தை செல்வா அறக்கட்டளை நிதியத்தின் பங்களிப்புடன் இடம் பெறவுள்ளதால் இந் நிகழ்வில் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள், பெற்றோர்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார்.

# சமூக சேவைகள் அமைச்சின் செயலமர்வு

(கிளிநொச்சி)

சமூக சேவைகள் அமைச்சின் செயலமர்வு ஒன்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நாளை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளதாக அமைச் சின் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அனுசா கோகுல பெர்ணான்டோ அறிவித்துள்ளார்.

முன்னர் இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறுவதாக இருந்த போதும அங்கு வேறொரு நிகழ்வு நடைபெறுவதால் தற்போது கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதில் வடமாகாணத்தின் 34 பிரதேச செயலர் பிரிவி லுள்ள சமூக சேவைகள் அலுவலர்களும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ்பேசும் பிரிவுகளைச் சேர்ந்த 7 பிரதேச செயலகப் பிரிவு சமூக சேவைகள் அலுவலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் 3,000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவுக்கு புதிய பயனாளிகளை இணைப்பது தொடர்பாகவும், அத்திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் இதில் ஆராயப்படவுள்ளது. (90)

# காளவாய்த்துறை ஐயனாரின் வருடாந்த தீர்த்தோற்சவம்



(யாழ்ப்பாணம்)

வேலணை கிழக்கு செட்டிபுலம் காளவாய்த்துறையின், கடற்கரையோரம் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஐயனாரின் வருடாந்த, தீர்த்தத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

இக்கோவிலின் முன் பக்கம் அழகான புனிதம் நிறைந்த,கடல் மாதாவின் மடியினில் ஐயனார் எழுந்தருளி தீர்த்த உற்சவத்தினைக் கொண்டாடினார. இதனால வெள்ளைக்கடற்கரை மேலும் புனிதமடைந்துள்ளது.

இக்கடற்கரையில் இறந்த உறவுகளுக்கு பிதிர்க்கடன் செலுத்தி, அவர்களின் ஆன்மாவின் மோட்சத்திற்கான கடமைகளும், வழிபாடுகளும் நிறைவேற்றப்படுகின்றன. இவ்விடம் கீரிமலைக்கு ஒப்பான புனித இடம் என்று நம் முன்னோர்களால் கூறப்பட்டுள்ளதுடன் இக்கடலில்நிறைவேற்றப்படும் புனித காரியம் தமிழகத்தில் இராமேஸ்வரத்தில் நிறைவேற்றப்படும் புனித காரியத்திற்கு ஒப்பானது என்றும் கூறப்படுகின்றது.

இவ்வளவு சிறப்புப் பெற்ற வெள்ளைக்கடற்கரையினிலேயே முதன் முதலாக காளவாய்த்துறை ஐயனார் தீர்த்தமாடி அடியார்களுக்கு அருள் பாலித்துள்ளார்.

## வடசேரி விக்னேஸ்வரன் ஆலயத்தின் சப்பற வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

பெரியவிளான் வடசேரி விக்னேஸ்வரன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பற வெள்ளோட்ட விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (66)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆங்கில தின விழா கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது விருந்தினர்கள் உரையாற்றுவதையும், சபையினரையும் காணலாம். (137)

# ருவென்ரி-20இல் முதல் வெற்றி

## பாகிஸ்தானை புரட்டியெடுக்கும் பங்களாதேஷ்



(டாக்கா)

ஒரு நாள் தொடரில் பாகிஸ்தான் அணியை வெள்ளையடிப்புச் செய்த பங்களாதேஷ் அணி ருவென்ரி-20 போட்டியிலும் பாகிஸ்தான் அணியை புரட்டியெடுத்துள்ளது.

பங்களாதேஷுக்கான கிரிக்கெட் சுற்று-லாவை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் மூன்று ஒரு நாள் மற்றும் ஒரு ருவென்ரி-20 மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளைக்கொண்ட கிரிக்கெட் தொடரில் பங்கேற்று வருகின்றது. இதில் ஒரு நாள் போட்டித் தொடரை 3-0 என்ற ரீதியில் பங்களாதேஷ் அணி கைப்பற்றியது. இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான ருவென்ரி-20 போட்டி நேற்று முன்தினம் டாக்காவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. இதில் முக்தர் அகமட் 37 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி முதல் மூன்று விக்கெட்டுக்களை 38 ஓட்டங்களைப் பெற்றவேளை பறிகொடுத்தபோதிலும் ஷகிப் அல் ஹசன் மற்றும் சபிர் ரஹ்மான் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்று சாதனை படைத்தது. இறுதியில் பங்களாதேஷ் அணி 16.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஷகிப் அல் ஹசன் ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 57, சபிர் ரஹ்மான் ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 51 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

இதன் மூலம் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றிபெறுவது இதுவே முதல் முறையாகும்.

இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட முதல் டெஸ்ட் ஆட்டம் நாளை மறுதினம் குல்னாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய ஆட்டம்

PEPSI IPL

கொல்கத்தா எதிர் ராஜஸ்தான்

இடம் : கொல்கத்தா


நேரம் : மாலை 4.00 மணி

டில்லி எதிர் பெங்களூர்

இடம் : டில்லி

நேரம் : இரவு 8.00 மணி

# மீண்டும் சிக்கல்



(புதுடில்லி)

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கொல்கத்தா வீரர் சுனில் நரைன், மீண்டும் விதிமுறை மீறி பந்து வீசுவதாக புகார் எழுந்துள்ளது.

மே.தீவுகள் அணியின் சுழற்பந்துவீச்சாளர் சுனில் நரைன், ஐ.பி.எல்., தொடரில், கொல்கத்தா அணியில் விளையாடி வருகிறார். கடந்த ஆண்டு நடந்த சம்பியன்ஸ் லீக் தொடரில் இவர், ஐ.சி.சி. நிர்ணயித்த 15 டிகிரி அளவை விட அதிகமாக முழங்கையை வளைத்து பந்து வீசுகிறார் என, புகார் தெரிவிக்கப்பட்டது. இந்திய கிரிக்கெட் (பி.சி.சி.ஐ.,) சபை மூலம், மீண்டும் நடந்த பந்துவீச்சுச் சோதனையில் தேர்ச்சி அடைந்தார். இந்நிலையில், நரைன் விதிமுறை மீறி பந்துவீசுவதாக புகார் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து பி.சி.சி.ஐ., செயலர் அனுராப் தாகூர் வெளியிட்ட அறிக்கை: கடந்த 22ஆம் திகதி விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற ஹைதராபாத்துக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா வீரர் நரைன், விதிமுறை மீறி பந்துவீசியதாக புகார் எழுந்துள்ளது. நடுவர்களான ரிச்சர்ட் இல்லிங்வொர்த் (இங்கிலாந்து), வினித் குல்கர்ணி (இந்தியா) இந்த புகாரை பதிவு செய்துள்ளனர். நரைன் தொடர்ந்து தற்போதைய தொடரில் பந்துவீசலாம். அதே நேரம், ஐ.சி.சி., மற்றும் பி,சி.சி.ஐ., அங்கீகாரம் பெற்ற மையத்தில் இவரின் பந்துவீச்சு பயோ மெக்கானிக்கல் முறையில் சோதனை செய்யப்படலாம். இவ்வாறு அதில் அனுராப் தாகூர் தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி.,யின் விதிமுறைப்படி, ஒரு வீரர் விதிமுறை மீறி பந்துவீசும் புகாரில் மீண்டும் சிக்கி உறுதியானால், ஒரு ஆண்டுக்கு பந்துவீச தடை விதிக்கப்படும்.

## ஹோலி மகிழ்ச்சி

(பெங்களூர்)

வலுவான அணியாகத் திகழும் ராஜஸ்தான் அணியை வீழ்த்தியது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த வெற்றிக்கு வேகப்பந்து வீச்சாளர் மைக்கல் ஸ்ரார்க் முழுக் காரணம். கடந்த சில போட்டிகளில் காயம் காரணமாக அவரால் இப்போட்டித் தொடரில் பங்குபற்ற முடியவில்லை. இது எங்கள் அணிக்குப் பெரும் இழப்பாக அமைந்துவிட்டது. அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்டு கடந்த தொடர்கள் போல் அல்லாமல் கிண்ணத்தை வெல்ல முயற்சிப்போம். அதற்கான தகுதியும் திறமையும் எங்களிடம் இருப்பதை ராஜஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் நிரூபித்திருக்கின்றோம் என பெங்களூர் அணிக் கப்டன் ஹோலி தெரிவித்துள்ளார்.

# பெண் நடுவர்களுக்கான பயிற்சி முகாம்


பெண்களுக்கான உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டி எதிர்வரும் யூன் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் சுவிட்சர்லாந்து சூரிச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற பயிற்சி அமர்வு ஒன்றில் போட்டிகளுக்கான பெண் நடுவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

7ஆவது பெண்களுக்கான உலகக் கிண்ண கால்பந்தாட்டப்போட்டிகள் எதிர்வரும் யூன் மாதம் 6 ஆம் திகதி கனடாவில் ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டிகளில் 49 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி 70 பெண் நடுவர்கள் பணியாற்றவுள்ளனர்.

இதன்போது கருத்துத்தெரிவித்த ஜேர்மனியைபிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரி ஒருவர், ஒவ்வொரு நாட்டினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் போட்டி நடுவர்களையும் துணை நடுவர்களையும் இங்கே பார்க்கக் கூடியதாகவுள்ளது. நாங்கள் அனைவரும் 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்டப்போட்டியை பொறுப்புடன் நிறைவு செய்வதற்கு உற்சாகத்துடன் காத்திருக்கின்றோம். பயிற்சி அமர்வின்போது உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளுக்காக உடலியல் மற்றும் உள்வியல் ரீதியில் எம்மை தயார்ப்படுத்தி வருகின்றோம் என தெரிவித்துள்ளார்.

மேலும் பெண்கள் கால்பந்தாட்டப்போட்டியானது கடந்த வருடங்களை விட தற்போது வளர்ச்சி அடைந்துள்ளதாகவும் போட்டியாளர்கள் உடலியல் ரீதியிலும் உளவியல் ரீதியிலும் சிறப்பாக உள்ளனர். போட்டி நடுவர்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தவர்களாகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மேலும், மெக்ஸிகன் கால்பந்தாட்ட நடுவர் ஒருவர் தெரிவிக்கையில் ஆண்களுக்கான கால்பந்தாட்ட போட்டிகளுக்கு தான் நடுவராக பணியாற்றுகின்ற போதிலும் உளவியல் ரீதியில் போட்டிகளுக்கு தயாராக வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்று என குறிப்பிட்டுள்ளார்.

# என்னம்மா கண்ணு; ஏன் சறுக்கல்




(ஸ்டட்கார்ட்)

ஜேர்மனியின் ஸ்டட்கார்ட் நகரில் நடைபெற்று வரும் சர்வதேச ரென்னிஸ் போட்டியில், நடப்பு சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோவா அதிர்ச்சிகரமாக தோல்வி அடைந்து வெளியேறினார்.

2012, 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் ஸ்டட்கார்ட் சம்பியன் பட்டத்தை தக்க வைத்த ஷரபோவா (வயது-28), மகளிர் ஒற்றையர் இரண்டாம் சுற்று ஆட்டத்தில் ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பரை எதிர்கொண்டார். பரபரப்பான இந்த ஆட்டத்தில் 2-6, 7-5, 6-1 என்ற செட்கணக்கில் ஷரபோவா தோல்வியடைந்தார்.

இந்ததோல்வியின் மூலம், அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ள உலகத் தரவரிசையில் தனது இரண்டாம் இடத்தை இழக்கிறார்.

இதேபோல் உலகின் 4ஆம் தரநிலை வீராங்கனையான பெட்ரா கிவிடோவாவும் (செக் குடியரசு) இரண்டாம் சுற்றில் தோல்வியடைந்தார். இவரை, தரவரிசையில் மிகவும் பின்தங்கிய அமெரிக்க வீராங்கனை மேடிசன் பிரெங்கிள் 6-3, 7-6(7-2) என்ற செட்கணக்கில் வீழ்த்தி காலிறுதியை உறுதி செய்தார்.

4ஆம் தரநிலையில் உள்ள டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாகி, செக் குடியரசின் லூசி சபரோவாவை வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

# கொலை மிரட்டல்



(ஸ்டட்கார்ட்)

ஜேர்மனியின் ஸ்டட்கார்ட் நகரில் நடைபெற்று வரும் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் விளையாடிவரும் ரோமானிய வீராங்கனை சிமோனா ஹாலப்புக்கு மர்ம நபர் ஒருவர் கொலை மிரட்டல் விடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

அவருக்கு டுவிட்டர் மூலம் டென்மார்க் இரசிகர் ஒருவர் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இதனால், அவருக்கு போட்டி ஏற்பாட்டாளர்கள் கூடுதல் பாதுகாப்பு அளித்துள்ளனர்.

உலகத் தரவரிசையில் 3ஆம் இடத்தில் உள்ள ஹாலப் (வயது - 23), நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இத்தாலின் சாரா எராணியை 6-4, 6-4 என்ற நேர்செட்களில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஹாலப், தனக்கு வந்த கொலை மிரட்டல் குறித்து கருத்து தெரிவிக்க மறுத்தார். இந்தக் கொலை மிரட்டலை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை என்று கூறிய அவர், தான் விளையாட்டில் பங்கேற்க வந்திருப்பதாகவும், இந்த விவகாரத்தை மற்றவர்கள் கவனித்துக்கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டார்.

விளையாட்டு செய்திகள்

# கராத்தே ஆசானுக்கு சாமஸ்ரீ தேசகீர்த்தி விருது





இலங்கை அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் 25ஆவது வருட தேசிய விருது வழங்கல் நிகழ்வில் கராத்தே கலையில் பல வீர,வீராங்கனைகளை உருவாக்கி வரும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சோட்டோகான் கராத்தே கலை ஆசிரியர் சௌந்தரராஜா முருகேந்திரன் (கறுப்புப் பட்டி - 4) கௌரவிக்கப்பட்டார். கடந்த 18ஆம் திகதி வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இக்கௌரவிப்பு நிகழ்வில் இவருக்கு சாமஸ்ரீ தேசகீர்த்தி விருது வழங்கப்பட்டது. சிறுவயது முதல் கராத்தே கலையில் ஆர்வம் கொண்டுள்ள இவர் பல வீர,வீராங்கனைகளை உருவாக்கியுள்ளதுடன் வெளிநாட்டு கராத்தேப் போட்டிகள் பலவற்றிலும் பங்குபற்றி வெற்றி பெற்று தாயகத்திற்கு பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## எழுச்சி பெறுவோம்

(மும்பை)

தொடர் தோல்விகள் எங்களைப் பாதிக்கவில்லை. அடுத்த சுற்று ஆட்டங்களுக்கு எங்களால் முன்னேற முடியும் என மும்பை இந்தியன்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

மும்பை அணி அடுத்தடுத்து தோல்விகளைச் சந்தித்து வருவது வேதனை அளிக்கின்றது. வெற்றியைப் பதிவு செய்ய நாங்கள் பல வழிகளிலும் முயற்சி செய்து வருகின்றோம். அடுத்து வரும் போட்டிகளில் எங்கள் ஆட்ட வியூகம் சிறப்பான முறையில் அமையும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. பந்துவீச்சில் கூடுதல் கவனம் செலுத்தி செயற்படத் திட்டமிட்டுள்ளோம். சிறந்த பயிற்றுவிப்பாளர்கள், சிறந்த வீரர்களைக் கொண்டுள்ள நாம் அடுத்தடுத்து தொடர் வெற்றிகளைக் குவித்து எழுச்சி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# வடக்கு மாகாணப் போட்டியில் அசத்திய கிளி. மகாதேவா இல்ல வீரர்கள் கௌரவிப்பு



(கிளிநொச்சி)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே போட்டியில் பதக்கங்களை வென்று அசத்திய கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறுவர் இல்ல வீர, வீராங்கனைகள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேளினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் வைபவத்தில் வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மாகாணப் போட்டிகளில் அசத்திய வீர,வீராங்கனைகளைக் கௌரவித்தார்.

பிரதம பயிற்றுநர் சி. விஜயராஜனி பயிற்றுவிப்பின் கீழ் இவ்வீராவீராங்கனைகள் வடமாகாணப் போட்டிகளில் பங்குகொண்டு இரண்டு தங்கம், ஆறு வெள்ளிப் பதக்கங்களை சுவீகரித்துக்கொண்டனர்.

19 வயதுக்குட்பட்ட குழு கராத்தே மற்றும் குமித்தே போட்டிகளில் என். ஷர்மிளா இரண்டு தங்கப் பதக்கங்களையும், தனிக் காட்டாப் போட்டியில் வெள்ளிப் பதக்கங்களையும் வென்றார்.

15 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் ஏ. மகலினி, மோ. சுதர்சனா, வை. சாளினி ஆகியோர் வெள்ளிப் பதக்கத்தையும், 17 வயதிற்குட்பட்டோருக்கான போட்டியில் எம். சௌமியா, ரீ. கேசாளி ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும் வென்று மகாதேவா சைவ இல்லத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த கராத்தே பிரதம ஆசிரியர் விஜயராஜ், கராத்தே கலையில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இந்த வீர, வீராங்கனைகள் செயற்பட்டு வருவதும், மாகாணப் போட்டியில் சாதித்தமையும் உண்மையிலேயே பெருமையான விடயமாகப் பார்க்கின்றேன். தொடர் பயிற்சிகள் மூலமே இவ்வாறான வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். எந்தவொரு துறையாக இருந்தாலும் அதில் சாதிக்க வேண்டும் என்ற வெறியும், ஆர்வமும், அர்ப்பணிப்புடன் கூடிய ஈடுபாடும் இருக்கும் பட்சத்தில் அவர்களால் சாதிக்க முடியும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். தொடர்ந்தும் சிறந்த பயிற்சிகளை வழங்கி தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இவர்களை சிறந்த நிலைக்குக் கொண்டு வருவதே எனது முழு நோக்கமாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## மாவட்ட சதுரங்கப் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை திருநாவலூர் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாவட்ட மட்ட சதுரங்கப் போட்டித் தொடர் நேற்று முதல் நடைபெற்று வருகின்றது.

பாடசாலை வீரர்கள் மற்றும் திறந்த போட்டிகள் என இரு பிரிவுகளாக நடாத்தப்படும் இப்போட்டியில் ஆண், பெண் என இருபாலாரும் பங்குகொள்ள முடியும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை மேலைப்புலோலி சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெற்றுவரும் இப்போட்டித் தொடரில் இன்றைய தினம் 15, 17, 19 ஆகிய வயதுப் பிரிவு வீர,வீராங்கனைகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் 9, 11, 13 வயதுப் பிரிவினருக்கிடையில் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. முதல் மூன்று இடங்களைப் பிடிப்போருக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சதுரங்கப் போட்டியை இளம் வீர,வீராங்கனைகளிடையே வளர்க்கும் வகையிலும் ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்குடனுமேயே இப்போட்டி நடாத்த முடிவு செய்தாக போட்டி அமைப்பாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (85)

# எல்லேயில் கலக்கும் மணற்காடு ·றோ.க.

(வரணி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட எல்லேப் போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் பெண்களுக்கான எல்லே போட்டி கடந்த வாரம் வரணி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த பல அணிகள் பங்கு கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணியும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணியும் மோதின.


35 பந்துகளைக் கொண்ட இறுதிப் போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி முதலில் ஆடியது. இதில் சியாலினி மற்றும் டியூசா, வேளாயினி ஆகியோரின் அபாரமான செயற்பாட்டின் மூலம் மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி 10 புள்ளிகளைப் பெற்றது. இதில் சியாலினி ஐந்து, டியூசா, வேளாயினி ஆகியோர் தலா இரு புள்ளிகளைப் பெற்றனர்.

பதிலுக்கு 11 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி வெற்றியைப் பதிவு செய்யும் முனைப்புடன் ஆடியபோதிலும் அதன் அருகில்கூட நெருங்க முடியவில்லை. நிறைவில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி ஐந்து புள்ளிகளைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மதுசா இரு புள்ளிகளைப்பெற்றார். இதன் மூலம் மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி சம்பியன் பட்டத்தை வென்றதுடன் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (85)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கம் பதவியேற்றதும்**



# 100 நாட்களும் ஆட்டமும்

- புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.

முன்மொழிந்த 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் இறுதி நாள் 23 ஏப்ரல், 2015. அதாவது, அந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம் அன்று நள்ளிரவோடு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட வேண்டும்.

ஆனால், 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் இன்னமும் 50 சதவீதத்துக்கும் அதிகமான விடயங்கள் நிறைவேற்றப்படாமல் காத்திருப்பு பட்டியலிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தி அதிகாரங்களை நாடாளுமன்றத்துடன் பகிரும் முறைமையை முன்வைக்கும் அரசியலமைப்பின் 19ஆவது திருத்த சட்டமூலம் இந்த 100 நாட்களுக்குள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

அதுதான், அந்த வேலைத்திட்டத்தில் பிரதானமானது. ஆனால், அது முடியாமல் போயிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், நல்ல மாற்றங்களைக் கோரியே மக்கள் வாக்களித்தனர். மைத்திரிபால சிறிசேனவும் அந்த மாற்றங்கள் குறித்து குறிப்பிட்டளவில் நம்பிக்கையோடு ஆட்சிபீடமேறினார்.

ஆனால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையற்ற நிலையில் அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவதோ, தேவையான அரசியல் திருத்தங்களைச் செய்வதோ அவ்வளவு இலகுவானது அல்ல என்பதை இந்த 100 நாட்கள் அவருக்கு உணர்த்தியிருக்கின்றன. கடந்த கால ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் சற்று மென்போக்குள்ளவரான மைத்திரிபால சிறிசேனவினால் இப்போதுள்ள சிக்கலான அரசியலை வெற்றி கொள்ள முடியவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை பெற்றுக் கொண்ட பின்னரும் கட்சியின் கட்டுப்பாட்டை முழுமையாக எடுத்துக் கொள்ள முடியாமல் மைத்திரிபால சிறிசேன தவிக்கின்றார்.

தன்னுடைய அமைச்சர்கள் அதிகரித்தால் கட்சி உடையும் சாத்தியம் உண்டு என்பதை அவர், நன்றாகவே உணர்ந்து வைத்திருக்கின்றார்.

ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டாலும் மகிந்த ராஜபக்ஷவுக்கு சிங்கள, பௌத்த மக்களிடம் இருக்கும் ஆதரவு கொஞ்சம் அச்சமூட்டுவதாக இருக்கின்றது. எந்தவொரு தருணத்திலும் அந்த ஆதரவு தளம் இருக்கும் அளவைவிட பல்கிப் பெருகினால், அது தனக்கு அச்சுறுத்தலானது என்பதை மைத்திரிபால சிறிசேன உணராமல் இல்லை.

ஆனால், மைத்திரிபால சிறிசேனவின் இந்த அமைதியான நடவடிக்கைகளை தமக்குச் சாதகமாகக் கையாளும் மகிந்த ராஜபக்ஷ தரப்பினர், எப்படியாவது நாடாளுமன்றத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றனர்.

மீளவும் அதிகாரத்துக்கு வந்துவிடும் மகிந்த ராஜபக்ஷ தரப்பின் போரில், வேண்டியது மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரதுங்க போன்றவர்களுடன் இல்லை. அவர்களையெல்லாம் தாண்டி ரணில் விக்கிரமசிங்க என்கிற பெரும் அரசியல் நந்திவாதியுடன். மகிந்த ராஜபக்ஷவுக்கும் அது தெரியும்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க தன்னை நோக்கி வீசப்படும் கத்தி மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரதுங்க என்கிற இரண்டு பேரையும் தாண்டியே வர வேண்டும் என்கிற தைரியத்துடன் தன்னுடைய அடுத்த கட்ட நடவடிக்கைகளில் கவனமாக இருக்கின்றார்.

எப்படிப் பார்த்தாலும் மகிந்த ராஜபக்ஷவின் மீள் எழுச்சி(!) ரணில் விக்கிரமசிங்கவுக்கான அந்த பயன்களை எதிர்வரும் நாட்களில் வழங்கலாம்.

ஆனால், அந்த எழுச்சியின் வேகம் தன்னை வாரிச் சுருட்டாத அளவுக்கு பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதிலும் அவர் குறியாக இருக்கின்றார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மகிந்த ராஜபக்ஷவை விசாரணைகளுக்காக (வாக்குமூலம் பெறுவதற்காக) அழைத்த விவகாரம் என்பது சரியாக திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டிருக்கும் நாடகமோ என்று தோன்றுகின்றது. இதனை ரணில் விக்கிரமசிங்கவே திட்டமிட்டு அரங்கேற்றியிருக்கலாம் என்றும் தோன்றுகின்றது. ஏனெனில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுறுத்தும் 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் குறியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, தேர்தல் முறை மாற்றத்தை செய்யக் கோரும் 20ஆவது திருத்த சட்டத்தின் நிறைவேற்றத்தை விரும்பவில்லை.

அந்தத் திருத்தம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாதகமானது. ஏனெனில், அது தென்னிலங்கையின் கிராமங்களில் அதிக தோல்வியைச் சாத்தியமாக்கலாம் என்று அவர் அச்சம் கொள்கின்றார். அதில், குறிப்பிட்டளவு உண்மையும் இல்லாமல் இல்லை.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, மகிந்த ராஜபக்ஷவை விசாரணைகளுக்காக அழைத்த விடயத்தை தமது பலத்தை காட்டுவதற்கான சந்தர்ப்பமாக மகிந்த தரப்பு கையாண்டிருக்கின்றது.

மைத்திரிபால சிறிசேன தன்னுடைய வாழ்நாளில் ஜனாதிபதியாவேன் என்று என்றைக்குமே கனவு கண்டிருக்கமாட்டார். ஆனால், அவர் காணாத கனவொன்று நனவாகியிருக்கின்றது. ஆனால், அந்த நனவான கனவினை (ஜனாதிபதி பதவியினை) அவர் அனுபவிப்பதற்கும் ஆயிரத்தெட்டு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்கின்றது. அவர் தன்னுடைய அரசியல் வாழ்வின் வெற்றியின் கர்வமும் அமைதியும் இரண்டையும் ஒருங்கே எதிர்கொண்டிருக்கின்றார்.

இவ்வாறான நிலையை அவர் நிச்சயமாக எதிர்பார்த்திருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ என்கிற தடையை தாண்டிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று மட்டுமே நம்பினார். ஆனால், பெரும் தடையைத் தாண்டியவுடன் புதிது புதிதாக முளைக்கின்றன. இன்னொரு பக்கம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்று நடத்தப்பட்டு பெரும்பான்மையுள்ள அரசாங்கமொன்று அமையும் வரை, இப்போதுள்ள அரசியல் நெருக்கடியை தவிர்க்க முடியாது என்கிற நிலை ஏற்பட்டுவிட்டது.

# சிறுபான்மை கட்சிகளின் முன் உள்ள சவால்

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்கான அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை சிறுபான்மை கட்சிகள் உட்பட ஏறத்தாழ சகல அரசியல் கட்சிகளும் ஆதரிக்கின்றன.

ஆனால், அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தமாக சமர்ப்பிக்கப்பட விருப்பதாக கூறப்படும் தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பாக, வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கு வெளியே இயங்கும் சிறுபான்மை கட்சிகள் சற்று அச்சத்துடனேயே இருக்கின்றன.

விகிதாசார முறையோடு தொகுதி வாரி தேர்தல் முறையும் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் மூலம் அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது.

அதன் படி நாடாளுமன்றத்துக்கு தொகுதிவாரியாக தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் அதிகமாக இருக்கும்.

இதனால், வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு வெளியே சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் குறைந்துவிடுமோ என சிறுபான்மை கட்சிகள் அச்சப்படுகின்றன.

சுதந்திரம் அடைந்த பின்னர், இலங்கையில் இரண்டு முறை அரசியலமைப்பு முற்றாக மாற்றப்பட்டு புதிய அரசியலமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 18 முறை அரசியலமைப்பு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றில் எல்லா மாற்றங்களும் திருத்தங்களும் நாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியதாக கூற முடியாது. ஆனால், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புக்களும் ஒரு சில திருத்தங்களுமே நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

குறிப்பாக 1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தம், 2001 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 17 ஆவது திருத்தம் மற்றும் 2010ஆம் நிறைவேற்றப்பட்ட 18 ஆவது திருத்தம் ஆகியன நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதைப் போலவே பெரும் சர்ச்சைகளையும் கிளப்பின.

1972 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது குடியரசு அரசியலமைப்பானது, பிரித்தானிய ஆட்சியிலிருந்து நாட்டை முற்றாக விடுவித்த போதிலும் அதுவரை சிறுபான்மை மக்களுக்கு அரசியலமைப்பின் மூலமாகவே வழங்கப்பட்டிருந்த ஒரு பாதுகாப்பு உத்தரவாதம் இதன் மூலம் ஒழிக்கப்பட்டது.

அது தான் 1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் 29 ஆவது சரத்தின் மூலம் வழங்கப்பட்டு இருந்த பாதுகாப்பாகும்.

முதலாவது குடியரசு அரசியலமைப்புக்கு முன்னர் சிங்களம் அரச கரும மொழியாகும் என்பது தனியானதோர் சட்டமாகவே இருந்தது.

ஆனால், அரச கரும மொழி சிங்களம் என்பது இந்த அரசியலமைப்பின் மூலமே அரசியலமைப்பு அந்தஸ்தை பெற்றது. தமிழ் அரசியல்வாதிகள், முதலாவது குடியரசு அரசியலமைப்பின் இந்த பாதகமான அம்சங்களுக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். ஆனால், சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம் அதனை பொருட்படுத்தவில்லை.

1978ஆம் ஆண்டு, பிரதமர் ஜே.ஆர்.ஜயவர்தனவின் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு நாட்டில் ஒருவித சர்வாதிகாரத்தை உருவாக்கியது எனலாம். அதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி, நீதிமன்றங்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் பொறுப்பு சொல்லாத ஒருவர். அந்த அரசியலமைப்பிலும் சிங்களம் அரச கரும மொழியாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

நிறைவேற்று ஜனாதிபதியின் சர்வாதிகார போக்கை ஓரளவுக்காவது கட்டுப்படுத்து முகமாக 2001ஆம் ஆண்டு 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்ட போது ஏனைய சகல அரசியல் கட்சிகளும் அதனை ஆதரித்த நிலையில், சிறுபான்மை கட்சிகளும் அதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

எனவே தான், பெரும்பான்மை பலம் இல்லாவிட்டாலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் அத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது.

17ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமே அரச அதிகாரிகள், நீதிபதிகள் ஆகியோரை



ஆட்சிப்பேறினார்.
ஆனால், நாடாளுமன்றத்தில்
பெரும்பான்மையற்ற நிலையில்

பயன்களை எதிர்வரும் நாட்களில் வழங்கலாம்.
ஆனால், அந்த எழுச்சியின் வேகம் தன்னை வாரிச்

அரசியல் நெருக்கடியை தவிர்க்க முடியாது என்கிற
நிலை உருவாகிவிட்டது.

மூலமாகவே வழங்கப்பட்டிருந்த ஒரு
பாதுகாப்பு உத்தரவாதம் இதன் மூலம்

# மைக்கேல் ஜாக்ஸன் — 3
## மீள முடியாததோர் இசைக்கனவு



Michael Jackson - Diana Ross

அந்தச் சம்பவத்துக்குப் பின்னர் மைக்கேலின் வாழ்வில் அவருடைய அம்மாவுக்கு அடுத்த இடத்தைப் பிடித்து விட்டார் டயானா ரோஸ். தன் அம்மாவுக்குப் பிறகு தன் குழந்தைகளை வளர்க்கும் உரிமை டயானா ரோஸுக்கு மட்டுமே உண்டு என்று உயில் எழுதி வைத்துள்ளார் மைக்கேல். அதே சமயம், தன் அம்மாவுக்கு முன்பு தான் இறக்க நேர்ந்தாலும் தன் குழந்தைகளை வளர்க்கும் உரிமை டயானாவுக்கு மட்டுமே உண்டு என்று உயிலில் குறிப்பிடுகிறார் மைக்கேல். அந்த உரிமையை அவர் தன் அம்மா கத்தரீனுக்குக் கூடக் கொடுக்கவில்லை. டயானாவும் மைக்கேலைப் பற்றிக் குறிப் பிடும் போது "மை பேபி மைக்கேல் ஜாக்ஸன்" என்றே சொல்வது வழக்கம்.

"ஜாக்ஸன் 5" குழுவின் முதல் ஆல் பத்தை டயானா ரோஸ் வெளியிட்ட பிறகு டயானா ரோஸும் மைக் கேலும் தொடர்ந்து பல மேடைகளில் ஒன்றாகப் பாடினார்கள். உலகின் முன்னணிப் பாடகி ஒருவர் பத்து வயது கூட நிரம்பாத ஒரு சிறுவனைத் தன்னுடைய ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பாட அழைத்தார் என்றால் மைக்கேலின் திறமையை நாம் புரிந்து கொள்ளலாம்.

மைக்கேலின் வாழ்வைப் புரிந்து கொள்ள நமக்குக் கிடைத்திருக்கும் ஆவணங்கள் அதிகம். அதில் குறிப்பிடத் தகுந்த ஒன்று Paul Therou தற்போது மைக்கேல் பற்றி எழுதிக் கொண்டிருக்கும் இன்னும் தலைப்பிடப்படாத புத்தகம். போல் தெரோ ஒரு புகழ்பெற்ற பயண எழுத்தாளர், நாவலாசிரியர். உலகின் பல நாடுகளை ரயிலிலேயே சென்று புத்தகங்கள் எழுதுபவர். ஒருமுறை உலகம் முழுவதுமே ரயிலில் சென்று "தெ க்ரேட் ரயில்வே பஸார்" என்ற சுவாரசியமான புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

முதலில் இவர் மைக்கேலை அவரது நெவர்லாண்ட் வீட்டில் சந்தித்தது பற்றிக் கூறுகிறார். நெவர்லாண்ட் 3000 ஏக்கரில் அமைக்கப்பட்ட ஒரு கனவு உலகம். மாயா ஜாலக் கதைகளில் மட்டுமே பார்க்கக் கூடிய ஒரு அற்புத உலகம். மலைப்பாம்பு, நாக பாம்பு, தவளை, நாய், ஒட்டகச் சிவிங்கி, குரங்கு, யானை (இது எலிஸபெத் டெய்லர் மைக்கேலுக்குப் பரிசாகக் கொடுத்தது), உராங் உடாங், மைக்கேலின் அறைத் தோழனாக இருந்த பபிள்ஸ் என்ற சிம்பன்ஸி (எலிஸபெத் டெய்லரை முதல் முதலாகப் பார்க்கச் சென்றபோது கூட மைக்கேல் இந்த சிம்பன்ஸியோடுதான் சென்றார்), சிங்கம், புலி, கரடி என்று பலவித மான மிருகங்களும், ராட்சதக் குடை ராட்டினங்கள், பொம்மை வீடுகள், கேளிக்கை ரயில் போன்று ஒரு சிறுவர் கண்காட்சியில் காணக் கூடிய எல்லா விஷயங்களும் இங்கே இருந்தன. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதற்கு ரயில் வசதியும், ஒரு ரயில்வே நிலையமும் கூட (கத்தரீன் ரயில்வே ஸ்டேஷன்) இங்கே அமைக்கப் பட்டிருந்தன.



இது தவிர, அங்கே நான்கு பேரின் புகைப்படங்கள் மாட்டப் பட்டிருந்தன. எலிஸபெத் டெய்லர், டயானா ரோஸ், மர்லின் மன்றோ, சார்லி சாப்ளின். அந்த நெவர்லேண்ட் கனவுலகத்தில் இருந்த இன்னொரு படம், பீட்டர். J.M. Barrie எழுதிய "பீட்டரும் வெண்டியும்" என்ற சிறுவர் சாகசக் கதையில் வரும் பீட்டர் என்ற கதாபாத்திரத்தைத்தான் மைக்கேல் தனது ஆதர்ஸமாகக் கொண்டிருந்தார். பீட்டர் தன்னுடைய உயிர்த் தோழியான வெண்டியை அழைத்துக் கொண்டு நெவர்லேண்ட் என்ற கனவுலகத்துக்குப் பறந்து சென்று ஏதேதோ சாகசங்களைச் செய்கிறான். பீட்டரின் விசேஷம் என்ன வென்றால், அவன் பெரிய ஆளாக வளராமல் எப்போதும் சிறுவனாகவே இருப்பான்.

இதே மனநிலையைத்தான் மைக்கேலும் கொண்டிருந்தார். ஒரு 12 வயதுச் சிறுவனின் மனநிலையை மைக்கேல் தன் வாழ்நாளில் தாண்டியதில்லை என்றே சொல்லலாம்.

1993 இல் மைக்கேலுக்கு 13ஆவது முறையாக க்ராமி பரிசு வழங்கப்பட்ட போது அவருடைய ஏற்புரை:

"கடந்த மாதம் இருந்த "எங்கே?" என்று நிலையிலிருந்து இப்போது "இங்கே" என்று நிலைமைக்கு வந்திருக்கிறேன். ஆனால் என்னை நீங்கள் ஒரு ஆளுமை என்று சொல்வதை விட ஒரு ஆள் என்று சொன்னால்தான் எனக்குப் பிடிக்கும். ஏனென்றால், என்னைப் பற்றி எழுதப்படும் எல்லாவற்றையும் நான் படிப்பதில்லை. என்னை ஒரு வினோதமான (weird and bizarre) பிறவி என்று உலகம் நினைப்பது பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. ஆனால் என்னைப் போல் ஐந்து வயதிலிருந்து பத்து கோடி மக்களின் பார்வைக்கு முன்னால் வளரும் யாருமே வித்தியாசமான ஒருவராகவே இருப்பார். அது தான் இயல்பு. கடந்த சில வாரங்களாக நான் என்னை சுத்திகரித்துக் கொள்ளும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறேன். இது எனக்கு ஒரு மறுபிறவி மாதிரியே தோன்றுகிறது.

என்னுடைய குழந்தைப் பருவம் என்னிடமிருந்து முற்றிலுமாகப் பறிக்கப்பட்டு விட்டது. கிறிஸ்மஸ் கிடையாது; பிறந்த நாள் கொண்டாட்டங்கள் கிடையாது; அது ஒரு முறையான குழந்தைப் பருவமாக இல்லை. ஒரு குழந்தைக்குக் கிடைத்திருக்க வேண்டிய எந்த சந்தோஷமும் எனக்குக் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக மிகக் கடுமையான பயிற்சி, போராட்டம், வலி பின்னர் அதன் விளைவான லௌகீக இலாபமும், தொழில்ரீதியான வெற்றியும் கிட்டியது. ஆனால் அதற்காக நான் கொடுத்த பயங்கரமான விலை - அதை எதனாலும் எனக்குத் திருப்பிக் கொடுக்க முடியாது. என் வாழ்வின் அந்தப் பகுதியை என்னால் என்ன செய்தாலும் திரும்ப வாழ முடியாது. இருந்தாலும், இன்று, என்னுடைய இசையை சிருஷ்டிக்கும் போது, நான் இந்தப் பிரபஞ்சத்தால் இயக்கப்படும் ஒரு கருவியாக உணர்கிறேன். கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்தி நம்முடைய இதயங்களைத் திறந்து காட்டும் போது இந்தப் பிரபஞ்சம் எந்த அளவுக்கு விகாசமடையும் என்பதை எண்ணும் போது நான் பரவசமடைகிறேன். சம்மதத்தின் சப்தம் இந்தப் பிரபஞ்சத்தின் ஊடாகவும், எல்லா உலகங்களின் ஊடாகவும் பொங்கிப் பிரவகித்து மாயாஜால நதியாய் ஓடுகிறது. அந்த அற்புதம் நமது இதயங்களை நிரப்புகிறது. வாழ்வின் கொண்டாட்டமும் குதூகலமும் ஒரு அற்புதமாக மின்னல்வெட்டைப் போல் ஒருக்கணம் நம் இதயங்களை நிரப்பும்.

அதன் காரணமாகவே நான் குழந்தைகளை நேசிக்கிறேன் அவர்களோடு இருக்கும்போது நிறைய கற்றுக் கொள்கிறேன். இந்த உலகின் பல பிரச்சினைகள் - அது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நகரத்தில் நடக்கும் சிறு குற்றமாக இருந்தாலும் சரி, அல்லது, மிகப் பெரிய போர், பயங்கரவாதம், அளவுக்கதிமான கைதிகளால் நிரப்பப்படும் சிறைச்சாலைகள் என்று ஆனாலும் சரி - இது எல்லாவற்றுக்குமே காரணம் சிறார்களிடமிருந்து அவர்களின் குழந்தைப் பருவம் பறிக்கப்பட்டதுதான்.

அந்த மேஜிக், அந்த அற்புதம், ஒரு குழந்தையின் வெகுளித்தன்மை - இதுதான் சிருஷ்டிகரத் தன்மையின் விதைகள். அதுதான் இந்த உலகை சொஸ்தப்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

குழந்தைகளிடமிருந்து நாம் எதைக் கற்றுக் கொள்ள வேண்டும்? சிறுபிள்ளைத் தனத்தையா? இல்லை" அவர்களோடு இருந்தால் அது நம்மை இந்த வாழ்வில் எங்கும் நிறைந்திருக்கும் மிக உன்னதமான, மிக ஆழமான நீதியையும் அறத்தையும் நோக்கி இட்டுச் செல்லும். அந்த அறமும், நீதியும் அவற்றை வாழ்ந்து பார்க்கச் சொல்லி நம்மை அழைக்கிறது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த உலகின் பிரச்சினைகளுக்கான தீர்வு நம்முடைய இதயத்திலே புதைந்து கிடக்கிறது; அதைக் குழந்தைகள்தான் நமக்கு அடையாளம் காட்டுகிறார்கள். நோயால் பீடிக்கப்பட்டும், வாழ்க்கையின் அனுகூலங்கள் கிடைக்கப் பெறாமலும் இருக்கும் குழந்தைகள் உட்பட இந்த உலகத்திலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இன்றைய தினம் நான் நன்றி கூறுகிறேன்" உங்களுடைய வலியும் வேதனையும் என்னை வெகுவாக பாதிக்கிறது."

(தொடரும்)

- சாருநிவேதிதா -

லும் ஜனாதிபத[...] ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் அத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது.

17ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமே அரச அதிகாரிகள், நீதிபதிகள் ஆகியோரை நியமிக்கும் விடயத்தில் ஜனாதிபதி தன்னிச்சையாக செயற்பட முடியாதவாறு சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. இது ஜனநாயகத்தை நோக்கிய ஒரு நடவடிக்கையாகும்.

ஆனால், மகிந்த ராஜபக்ஷ, இந்த 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திலிருந்த நல்ல அம்சங்களை 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் இரத்துச் செய்தார். அது மட்டுமல்லாது ஒருவர் எத்தனை முறையும் ஜனாதிபதியாகலாம் என்ற வகையில் சட்டத்தை மாற்றி அமைத்தார்.

ஆனால் இப்போது, அன்று 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு உட்பட நாட்டிலுள்ள ஏறத்தாழ சகல கட்சிகளும் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவி ஒருவருக்கு ஜனாதிபதியாக இரண்டு முறை மட்டுமே இருக்க முடியும் என்ற நிலையை கொண்டுவர இணங்கியுள்ளன.

தேர்தல் சீர்திருத்தங்களும் இதனோடே வர வேண்டும் என்று கூறுகிறதேயல்லாமல் ஸ்ரீ.ல.சு.க இதனை எதிர்க்கவில்லை.

தற்போதைய தேர்தல் முறையை மாற்றியமைக்க வேண்டும் என்பதில் எவ்வித விவாதமும் இல்லை. இதில் உள்ள விருப்பு வாக்கு முறையின் காரணமாக, தேர்தல் காலத்தில் வன்முறை ஏற்படுகிறது.

விருப்பு வாக்குகளுக்காக பலர் இனவாதத்தை தூண்டுகிறார்கள். அதேவேளை வேட்பாளர்கள் ஒரு மாவட்டம் முழுவதிலும் பிரசார வேலைகளில் ஈடுபட வேண்டியதால் பிரதான கட்சிகள் மூலம் பணம் படைத்தவர்கள் மட்டுமே போட்டியிடுகிறார்கள்.

சிறு கட்சிகள், மாவட்ட வேட்பாளர் பட்டியல்களை நிரப்பிக் கொள்வதற்காக சாதாரண மக்களை பட்டியல்களில் சேர்த்துக் கொள்கின்றன. ஆனால், அக் கட்சிகளின் தலைவர்கள் மட்டுமே அனேகமாக தெரிவு செய்யப்படுகிறார்கள்.

எனவே, தேர்தல் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். அதற்காக தினேஷ் குணவர்தனவின் தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்று நீண்ட காலமாக கலந்துரையாடி கண்டுபிடித்த தீர்வு தான் விகிதாசார மற்றும் தொகுதிவாரி தேர்தல் முறைகளின் கலப்பு முறையாகும்.

இந்த புதிய முறையின் படி தொகுதிவாரியாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை

## பிறமொழிச் சொற்கள்

கடுதாசி என்ற சொல் போத்துக்கீசியச் சொல்.
கக்கூஸ் என்ற சொல் டச்சு மொழிச்சொல்.

வக்கீல், அமீனா, ஜப்தி, கிஸ்தி, ஜன்னல் உருது மொழிச்சொல்.


ஆயி என்ற தமிழ்ச்சொல் மராத்திக்குப் போயிருக்கிறது.

அஸால்ட் ASSAULT என்ற ஆங்கில வார்த்தை "அலட்சியம்" என்ற பொருளில் தமிழுக்கு வந்துள்ளது.

சாம்பார், தலித், ரவா கேசரி, கில்லாடி ஆகிய சொல் அனைத்தும் மராத்தி மொழிச்சொல்லாகும்.

# தமிழர்களின் தீர்வுத்திட்டத்துக்கு பாக்.பங்களிப்பு வழங்க வேண்டும்

## - யாழ். வணிகர் கழகத் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நாட்டில் இடம்பெற்ற போரிற்கு பலவிதங்களிலும் இலங்கை அரசாங்கத்திற்கு உதவி செய்த பாகிஸ்தான் அரசாங்கம் தமிழர்களின் தீர்வுத் திட்டத்திலும் தனது பங்களிப்பை செய்ய வேண்டுமென யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. போர் முடிவுற்று ஐந்தரை வருடங்களிற்கு மேலாகியும் தமிழர்களிற்கான தீர்வு கிடைக்காத நிலையே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இன்றைய தினம் யாழ். வந்த பாகிஸ்தானுக்கான பதில் உயர்ஸ்தானிகர் யாழ்.வணிகர் கழகத்தினரை அவர்களது அலுவலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் போதே யாழ்.வணிகர் கழகத்தால் மேற்படி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இச்சந்திப்பு தொடர்பில் யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவிக்கையில்,

பாகிஸ்தானுக்கான பதில் உயர்ஸ்தானிகர் விஜயம் செய்திருந்தார். பாகிஸ்தான் அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் மேற்கொளளப்பட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் விளக்கமளித்திருந்தார். அதனடிப்படையில் இருநாடுகளிற்கிடையிலான ஏற்றுமதி இறக்குமதிகள். தொடர்பிலும் விளக்கமளித்திருந்தார்.

இரு நாடுகளிற்கிடையிலான ஏற்றுமதி இறக்குமதி தொடர்பில் இலங்கை அரசின் மற்றும் பாகிஸ்தான் அரசின் அனுசரணையுடனும் யாழ்.வணிகர் கழகத்தின் ஒத்துழைப்புடனும் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு ஒன்றை மிகவிரைவில் மேற்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்தனர்.

இதனை விட யாழ்ப்பாணத்தில் தற்போது உள்ள தள நிலை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர். தமிழ் மக்களின் பிரச்சினைகள் இந் நாட்டிலே எவ்வாறு போர் ஏற்பட்டது? , இங்கு நடந்த சம்பவங்கள் மக்களின் இடப்பெயர்வு, மக்களின் அகதி முகாம் வாழ்வு மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் அவர மிகுந்த அக்கறையுடன் கேட்டிருந்தார்.

அதற்கு நாங்களும் விளக்கங்களை கொடுத்திருந்தோம். குறிப்பாக போர் நடைபெற்ற காலப பகுதியில் பல விதங்களிலும் இலங்கை அரசாங்கத்திற்கு பாகிஸதான் அரசாங்கம் உதவியாக இருநததோடு போரில் வெற்றி பெறுவதற்கும் உதவியாக இருந்துள்ளது.

நாட்டில் இடம்பெற்ற போர் முடிவடைந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகின்ற நிலையில் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு இன்னும் கிடைக்காத நிலையே காணப்படுகின்றது. ஆகையால் தமிழர்களின் தீர்வுத்திட்ட விடயத்தில் பாகிஸ்தான் தனது பங்களிப்பைச் செலுத்த வேண்டும். என கோரிக்கை விடுத்திருந்தோம்.

மேலும் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி தொடர்பில் ஏதும் கோரிக்கை விடுக்கப்பட்டால் செய்து தருவதாக அவர் உறுதியளித்திருந்தார். குறிப்பாக யாழ். போதனா வைத்திய சாலை, யாழ்.பொது நூலகம் போன்ற விடயங்களில் உதவி செய்ய காத திருப்பதாக அவர் கூறியிருந்தார்.என யாழ்வணிகர் கழக தலைவர் தெரிவித்தார். (25)

# தரவுகள் மதிப்பீடு

சமூக சேவைகள் அமைச்சு அங்கவீனமுற்றவர்களுக்கு சிறந்த சேவையை வழங்க மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இதற்காக அவர்களது தரவுகள் தேவைகள் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்ள உள்ளதாக அமைச்சின் மேலதிக பணிப்பாளர் திருமதி ராதா நாணயக்கார தெரிவித்துள் ளார்.

மாவட்டங்கள் தோறும் அங்கவீனமுற்ற நபர்களின் விபரங்கள், அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தகவல்களை வழங்குமாறும் மாவட்ட செயலாளர்கள் மூலமாக' அத் தகவல்க்ள் திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (90)

# ஆற்றுகைக் கலைஞரின் ஒரு சுருக்க வரலாறு உரை

சமகாலக்கலை கட்டடக் கலை மற்றும் வடிவமைப்பிற்கான இலங்கை ஆவணக்காப்பகத்தினால் இலங்கையில் ஆற்றுகைக் கலை ஒரு சுருக்க வரலாறு என்னும் தலைப்பில் ஆற்றுகைக்கலைஞரான கொ.றோ.கொன்சன்ரைன் உரை நிகழத்தவுள்ளார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது.

தமிழ் மொழிபெயர்ப்பு இங்கு உரைக்கப்படும் என இந் நிலையத்தின் முகாமையாளர் திருமதி விமலா வேல்தாசன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் கோவில் வீதியில் இல.199இல் அமைந்துள்ள நிறுவனக் கட்டடத்தில் இவ் உரை இடம் பெறவுள்ளது. (137)

# "ஏழிசை" இசை நிகழ்வு




தென்மராட்சி கல்விவலயத்தின் ஏழிசை இசை நிகழ்வு சாவகச்சேரி நகராட்சிமன்ற பொன்விழா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ண குமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்களது இசைநிகழ்வுகளும் நடைபெற்றன.

பிரதமவிருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து சிறப்பிக்க சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் யாழ்.பல கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிருபாசக்தி கருணர் ஆகியோரும் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினர்களாக சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீவாமதேவன் வடமாகாணக் கல்வித் திணைக்கள அழகியல்பாட ஆசிரிய வளவாளர் திருமதி மதிவதனி விக்னராசா மற்றும் கலாபூஷணம் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் முதன்மைஆசிரியை திருமதி புனிதகுமாரி ஈழநேசன் மந்துவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மாணவன் ஸ்ரீ-நிருஷன் பொன்ஸ்ரீ வாமதேவனின் மாணவிகளது குழுப் பாடலும் இடம் பெற்றது. (11)

# கல்வி அமைச்சின் அபிவிருத்திக்கூட்டம்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வளங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக கல்வி இராஜங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தலைமையிலான ; கூட்டம் கடந்த திங்கட்கிழமை இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இதில் ஆசிரியர் கல்விக்கான பிரதம ஆணையாளர் எல்.எம்.டயஸ தர்மசேன, ஆசிரியர் கல்விப் பணிப்பாளர் திருமதி என்.எப்.எம் ஹரிஜா, கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம், பிரதி அதிபர் ச.லலீசன், விரிவுரையாளர் பிரதிநிதிகள், ஆசிரிய பயிலுநர் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பு மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கலாசாலைக்கு விஜயம் செய்தமையைத் தொடர்ந்து அவரது ஏற்பாட்டில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (90)

## முரசின் இன்றைய பலன்

(26.04.2015 ஞாயிற்றுக்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 13 ஆம் திகதி.
சித்த யோகம் அட்டமி -திதி
பூச நட்சத்திரம் மு.இ.6.59 வரை பின் ஆயிலியம்
இராகுகாலம் 4.29 - 5.59 வரை சுபநேரம் 8.59-1029 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — அதிர்ஷ்ட இலாபச்சீட்டினால் பணம் அள்ளுதல்.

**ரிஷபம்** — புகழ்ச்சிக்கு இடங்கொடாது உதவி செய்வதை பரிசீலனை செய்யுங்கள்

**மிதுனம்** — அநாவசியத் தலையீடுகளில் ஈடுபடாதிருக்கப்பாருங்கள்.

**கடகம்** — சகஊழியர்களுடன் முரண்படாது அரவணைத்து காரியத்தில் கண் வையுங்கள்

**சிம்மம்** — விபத்தினால் இடப்பக்க உறுப்புகள் பாதிக்கப்படும் அபாய நிலையுண்டு.

**மீனம்** — முரண்பட வந்தவருடன் மரியாந்தையைச் செலுத்துவதால் கவின் நிலை ஏற்படல்.

**கன்னி** — பொறுப்பைக்கோராது பணம் கொடுக்கக் கூடாது.

**கும்பம்** — காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் அதிர்ஷ்டத்தைக் கைவிடவேண்டாம்

**மகரம்** — அரசுப்பதவி பெற அரசியல் வாதிகளின் தயவினை நாடுதல்

**தனுசு** — அலட்சிய மனப்பாங்கினால் வெற்றிக்கனி கைவிட்டுப்போதல்

**விருச்சிகம்** — ஒரு நேரத்தில் பலவேலைகளில் ஈடுபட்டதால் தேக நலம் பாதிப்படைதல்

**துலாம்** — வானிலை அவதான நிலையத்தினரின் எச்சரிக்கையை மீறியதால் ஆபத்தில் சிக்குதல்

# கட்டாயம் அரிசி ஆலைகள் பதிவு செய்யப்பட வேண்டும்

## – நெல் சந்தைப்படுத்தும் சபை அறிவிப்பு

நாட்டிலுள்ள அனைத்து நெல் குற்றும் அரிசி ஆலைகளும் எதிர்வரும் மே மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாக கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும் என நெல் சந்தைப்படுத்தும் சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

1971ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தும் சபை சட்டத்தின் கீழ் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என நெல் சந்தைப்படுத்தும் சபையினால் வெளியிடப்பட்டுள்ள இது தொடர்பான அறிவித்தல் கூறுகின்றது.

சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அரிசி ஆலைகள அனைத்திற்கும் இது பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ள அந்த அறிவித்தலில் பதிவு செய்யப்படாத அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப்பதிவு தொடர்பான விண்ணப்பப் படிவங்களை நெல் சந்தைப்படுத்தும் சபை அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த அறிவித்தல் கூறுகின்றது.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சிறப்புற நடைபெற்ற ஆங்கில தின விழா

(திருநெல்வேலி)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆங்கில தினவிழா கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆங்கில மன்றத் தலைவர் தா.சுகந்தன் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. வரதராஜமூர்த்தி, சிறப்பு விருந்தினராக வட மாகாண ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. வர்ணகுலராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலில் விருந்தினர்கள் அனைவரும், விழா மண்டபம் வரை பான்ட் வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் பிரார்த்தனை இடம் பெற்றது.

வரவேற்புரையை ஆங்கில மன்றத் தலைவர் நிகழ்த்தினார். வரவேற்பு நடனம், பாடல் என்பவற்றைத் தொடர்ந்து வாழ்த்துரைகளைக் கலாசாலையின் அதிபர் வீ. கருணாலிங்கம், மன்றத்தின் காப்பாளர் எம்.ஜே.எஸ். முத்துக்குமாரசாமி ஆகியோர் வழங்கினர்.


மாண்வர்கள்ின் நடனம், நாடகம், பாடல் என்பன இடம்பெற்றன. போட்டியில் பங்குபற்றி வெற்றீட்டியவர்களுக்குப் பிரதம விருந்தினர்களும் முன்னாள் கலாசாலை அதிபர் வீ. கணபதிப்பிள்ளையும் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தனர். (137)

# பாற்சாலைக்கு புதிய கட்டடம்



யு.என்.டி.பி.யின் பங்களிப்புடன் 8மில்லியன் ரூபா செலவில் பால உற்பத்திக்கான இயந்திரங்கள் அமைப்பதற்கான கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. பால் உற்பத்தி நிறுவனத்தில் (கரவெட்டி நாவலர் மடத்தில்) பாற்சபையின் அருகாமையில் அமைக்கப்படவுள்ள இக்கட்டடத்திற்கு பால் உற்பத்தி நிறுவனத்தின் தலைவர் பு.ராதாகிருஸ்ணன் தலைமையில் அடிக்கல் நாட்டு வைபவம் நடைபெற்றது. யு.என்.டி.பி.பிரதம விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். அதைத் தொடர்ந்து உத்தியோகத்தர்களும் நாட்டி வைத்தனர். இந் நிகழ்வினை கால்நடை வைத்தியரும் ஆரம்பித்து வைத்தார். (18)

# பண்ணைப்பாலம் புனரமைப்புக்காக தற்காலிக பாலத்தால் போக்குவரத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்-பண்ணைப்பாலம் பழுதடையும் தறுவாயில் காணப்பட்டதால் பாலத்தின் புனரமைப்பு பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது நடைபெற்று வரும் யாழ். ஊர்காவற்றுறை வரையான வீதியின் புனரமைப்பின் போதே இப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பாலத்தின் இரு பக்கவீதிகளும் முன்னரே காப்பெற் இடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட போதிலும் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடம் பெறவில்லை.

எனவே இந்த பாலப்புனரமைப்பின் போது மக்கள் சிரமமின்றி போக்குவரத்துச் செய்வதற்காக தற்காலிக பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனூடாக நேற்று முன்தினம் முதல் போக்குவரத்து இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (51)

# பதிவிறக்கப் பெட்டகம்

இளம் பெண் கதவைத் திறந்தாள். வாசலில் ஒரு விற்பனையாளன் கையில் புத்தகங்களுடன் நின்றிருந்தான்.

“தாமதமாக வீட்டுக்குச் செல்லும் கணவர்கள் மனைவியிடம் கூற நூறு புதிய பொய்கள்’ என்ற புத்தகத்தின் ஒரு பிரதியை அவளிடம் நீட்டி, “வாங்கிக் கொள்ளுங்கள் மேடம்” என்றான் அவன்.

“இது எனக்கு எதுக்கு?” என்று கேட்டபடி சிரித்தாள் அவள்.

“சிரிக்காதீர்கள். ஒரு மணி நேரத்துக்கு முன்பு உங்கள் கணவர் ஒரு பிரதி வாங்கிக் கொண்டார்” என்றான் அவன்.

***  ***  ***  ***

கட்டிலில் படுத்துக் கிடந்த கணவன், தூக்கம் வராமல் புலம்பிக் கொண்டே இருந்தான்.

“எதிர்வீட்டுக்காரனிட்ட வாங்கின கடனை நான் நாளைக்கு எப்பிடித் திருப்பிக் கொடுக்கப் போறேனோ?”

கணவனின் புலம்பலைக் கேட்கச் சகிக்காத மனைவிக்கு எதிர்வீட்டுக்காரனின் மீது கோபம் கோபமாய் வந்தது. கதவைத திறந்து வெளியே வந்தாள். எதிர்வீட்டு ஜன்னல் அருகே நின்று கொண்டு சத்தமாக இரண்டுமுறை சொன்னாள்: “நாளைக்கு உனக்குப் பணம் கிடைக்காது”

இதைக் கேட்டு விழித்த எதிர்வீட்டுக்காரன் எழுந்து கட்டிலில் உட்கார்ந்தது ஜன்னல் வழியே தெரிந்தது.

மனைவி கணவனிடம் சொன்னாள்:

“நீங்கள் நிம்மதியாத் தூங்குங்கள். விடியிற வரைக்கும் எதிர் வீட்டுக்காரன் தூங்கப் போறதில்லை”

***  ***  ***  ***

ஒரு நோயாளி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆபத்தான நிலையில் இருந்த அவர், இரண்டு நாட்களுக்குப் பின், இறந்து விட்டதாகக் கருதி, சவக் கிடங்கிற்கு அனுப்பப்பட்டார். மறுநாள், அவர் அடைக்கப்பட்டிருந்த பெட்டியிலிருந்து பெருங் கூச்சல் எழுந்தது. போய்ப் பார்த்தால், அந்த நோயாளி சாகாமல், கத்திக் கொண்டிருந்தார்.

இரண்டாம் முறையாக, அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இம்முறையும் பலனில்லை. நன்கு பரிசோதித்த மருத்துவர்கள், அவர் இறப்பை ஒரு முறைக்குப் பல முறை உறுதி செய்தனர். மறுநாள், சவக்கிடங்கிலிருந்து கத்தல் ஏதும் வராதது கண்டு அதிகாரிகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி, அவர் உடல் வைக்கப்பட்டிருந்த பெட்டிக்குள் சென்று பார்த்தனர். ஆனால், அங்கே சடலத்தைக் காணோம்.

‘உயிருடன் இருக்கும்போதே, மூன்று முறை என்னைச் சாகடித்தவர்களே... மறுபடியும் உங்களிடம் சிகிச்சை பெற, விரும்பவில்லை...’ என்ற குறிப்பு மட்டும் இருந்தது.

***  ***  ***  ***

இங்கிலாந்தில் நடந்த சம்பவம் இது. நீதிபதி பேக்வெல்லின் தலை சரியான வழுக்கை. முகம் பார்க்கும் கண்ணாடிதான். அவர்முன் சட்டத்தரணி ஒருவர் சாட்சியை தீவிரமாக விசாரித்துக் கொண்டிருந்தார். நீதிபதியைப் போலவே சாட்சிக்கும் தலை நல்ல வழுக்கை.

கெடுபிடியாக இருந்த சாட்சியிடமிருந்து சட்டத்தரணிக்கு ஆதரவான பதிலேதும் கிடைக்கவில்லை. அவர் தொடர்ந்து கேள்விகள் கேட்கலானார்.

“உங்கள் தலை ஏன் வழுக்கை என்று உங்களுக்குத் தெரியுமா?”

“தெரியாது. என் தலை வழுக்கை. அவ்வளவுதான்” என்றார் சாட்சி.

“உங்கள் தலை வழுக்கை எப்படித்தெரியுமா? உங்கள் தலை முடி வெளியே வளராமல் தலைக்குள் வளர்ந்துவிட்டது. மூளை இருக்க வேண்டிய இடத்தை அதுதான் அடைத்துக் கொண்டிருக்கிறது” சொல்லிக் கொண்டே போன சட்டத்தரணிக்கு திடீரென்று நீதிபதிக்கும் தலை வழுக்கை என்ற நினைப்பு வந்தது. உடனே நீதிபதியைப் பார்த்து மந்தகாசமாகப் புன்னகைத்து, “மைலோட்... நான் சொன்னதற்குச் சில விதி விலக்குகள் இருக்கின்றன” என்றார்.

நீதிபதியும் முறுவலித்தார்.

***  ***  ***  ***

**கணவன்:** ரயிலில் எனக்கு அப்பர் பெர்த் கிடைச்சதினால சரியா தூங்கவே முடியேல்லை...

**மனைவி:** உங்களுக்குத்தான் அடிக்கடி பாத்ரூம் போகோணுமே... லோயர் பெர்த்காரரிடம் கேட்டு, மாத்திக்கொண்டு படுத்திருக்க வேண்டியதுதானே?

**கணவன்:** நானும் அப்படித்தான் நினைச்சேன்... ஆனால் காலை விடியும் வரைக்கும் மிடில், லோயர் இரண்டு பெர்த்துக்கும் ஆளே வரேல்லையே...

# விசேட தேவையுடைய முன்னாள் புலிகளுக்கு

## பராமரிப்பு நிலையம்

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளில், 3,402 பேர், போரில் உடல் உறுப்புகளை இழந்தவர்கள் என்றும், இவர்களில் 900 பேர், வாழ்நாள் முழுவதும் பராமரிக்க வேண்டியவர்கள் என்றும் புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் உள்ள உடல் உறுப்புகளை இழந்த 3,402 முன்னாள் போராளிகளில், 33 வீதமானவர்களுக்கு சிறப்பு கவனிப்புத் தேவைப் படுகிறது.

இவர்களில், மோசமான காயங்களுக்கு உள்ளாகி, உடல் உறுப்புகள் அகற்றப்பட்டவர்கள், முற்றாக பார்வைத்திறன் இழந்தவர்கள், முற்றாக செவித்திறன் இழந்தவர்கள், முழுமையாக உடல் செயற்றிறன் இழந்தவர்கள் ஆகியோர் அடங்குகின்றனர்.

இவர்கள் வாழ்நாள் முழுவதும் கவனிக்கப் பட வேண்டியவர்கள். இவர்களில் பெரும் பாலானவர்களுக்கு வீடுகளில் கவனிக்கும் வசதிகள் இல்லை.

சரியான மருந்துகளைப் பெறுவதற்கு பெரும் பாலானவர்களுக்கு நிதி நெருக்கடிகள் உள்ளன.

போரில் நெருக்கமான உறவுகளை இழந்து விட்ட பலருக்கு வீடுகளில் அவர்களைக் கவனிக்க யாரும் இல்லை.

முன்னாள் போராளிகளுக்கான கவனிப்பு நிலை யங்களை அமைப்பதற்கான யோசனை அரசியல் உயர்மட்டத்தில் பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

மோசமாக காயப்பட்ட முன்னாள் போராளி கள், எதிர்காலத்தில் நாட்டுக்கு முக்கியமான சமூகப் பிரச்சினையாக இருக்கும்.

அவர்களைத் தீவிரவாதிகளாக நாம் கருத முடியாது. அவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு, மீண்டும் சமூகத்தில் இணைக்கப்பட்டவர்கள்.

அவர்களின் சமூக பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கத்துக்குப் பொறுப்பு இருக்கிறது.

போரில் உடல் உறுப்புகளை இழந்த படை யினரைக் கவனிப்பதற்காக அபிமன்சலா நிலை யங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதுபோல, உடல் உறுப்புகளை இழந்த முன் னாள் போராளிகளைப் பராமரிப்பதற்கான நிலை யங்களை வடக்கு, கிழக்கில் அமைப்பதற்கான சாத்திய அறிக்கைகளை தயாரித்து வருகிறோம்.

தேவைக்கு ஏற்ப எத்தனை நிலையங்கள் அமைக்கப்படுவது என்று முடிவு செய்யப்படும்.

அது கிளிநொச்சியில் அமையுமா, யாழ்ப் பாணத்தில் அமைக்கப்படுமா என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்றை கலையுங்கள் தினேஷ் வலியுறுத்துகிறார்

ஜனாதிபதித் தேர்தலின் போது தெரிவிக்கப் பட்ட 100 நாடகள் நிறைவடைந்துள்ள நிலையில் நாடாளுமன்றத்தை கலைக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை 100 நாட்கள் நிறைவடைந்தது. எனவே ஏற்கனவே வழங்கப்பட்ட தேர்தல் வாக்கு றுதிக்கமைய நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடாததுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ள விவாதத்தின் போது உயர் நீதிமன்ற பரிந் துரைக்கமைய மாற்றமான சீர்திருத்தங்கள் 19 இல் சேர்க்கப்பட்டிருந்தால் அதறகு எதிராக செயற் படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் நல்லாட்சி ஜனநாயக வலுவூட்டல்

## நோர்வே தூதுவர் பாராட்டு

எத்தகைய தடைகள் வந்தாலும், ஜனநாயகத்தை வலுப் படுத்துவதற்கும், நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் சிறப்பாகச் செயற்படுவதாக இலங் கைக்கான நோர்வே தூதுவர் கிறேடா லோச்சன் தெரிவித் துள்ளார்.

நோர்வே தூதுவருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந் துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

100 நாட்கள் செயற்றிட்டம் வெற்றிகரமாக முன்னெடுக் கப்படுவது தொடர்பில் நோர்வே தூதுவர் பாராட்டுக் களைத் தெரிவித்துள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை யில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

நாட்டுக்காகவும், நாட்டு மக்க ளுக்காகவும் முன்னெடுக்கும் அர்ப்பணிப்புக்களை ஒரு போதும் மாற்றப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தச் சந்திப்பில் கூறி யுள்ளார்.

புதிய அரசாங்கத்திற்கு சர்வ தேச சமூகம் வழங்கும் ஒத் தாசை மற்றும் நாட்டில் சமா தானத்தை கொண்டுவரு வதற்கு யுத்த காலத்தில் நோர்வே அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பு என்பவற்றுக்கு ஜனாதிபதி தனது நன்றி களையும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதமாக மரம் கடத்த முயற்சி கனகராயன்குளத்தில் நால்வர் கைது




நெடுங்கேணி வனவள அதி காரி வி.எச்.சுஸில் சாந்த தலைமையிலான குழு இரகசி யத் தகவலின் அடிப்படையில் கனகராயன் குளம் புதூர் காட் டுப் பகுதியில் சட்டவிரோத மரம் வெட்டி கடத்த முற்பட்ட வாகனத்தையும் சாரதியையும் உதவியாளரையும் கைது செயது அவர்களின் தகவலை அடுத்து கனகராயன் குறிசுட்டான் பகுதியில் அவற்றைக் கடத்த முற்பட்ட உரிமையாளரின் வீட்டிலிருந்து சட்ட விரோதமாக வெட்டப்பட்ட 10 இலட்சம் ரூபா பெறுமதியான முதுரை மரத்தின் ஒரு தொகுதி தடிகளும் பலகைகளும் தீராந்திகளும். வன வள பாதுகாப்புப் பிரிவி னால் கடந்த வியாழக்கிழமை கைப்பற்றப்பட்டு 3 நபர்களை யும் வவுனியா மாவட்ட நீதி மன்றத்தில் கடந்த வியாழக் கிழமை ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இப் பகுதியில் பொலிஸ் நிலையம் இருந்த போதிலும் பெருமளவில் சட்ட விரோத மரங்கள் அறுக்கப்பட்டு தொடர்ச் சியாக யாழ். மாவட்டத்துக்கு கடத்தப்பட்டு வந்த நிலையில் இது தொடர்பான இரகசியத் தகவலின் அடிப்படையில் நெடுங கேணி வனவள பாதுகாப்பு பிரிவினரால் முற்றுகையிடப் பட்டு நபர்களையும் சட்ட விரோத மரங்களையும் கைப்பற்றியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (40)

### தினமுரசுக்கு வந்த கடிதம்

# வலிகாமத்தில் விரைவில் இடம்பெறப்போவது மிருகபலியா?

## புதிய சட்டங்களை இயற்றும் வைத்தியர்கள் எமக்குத் தேவையா என சிந்தியுங்கள்

வலிகாமம் பிரதேசம் தற்போது தீய சக்திகளின் உட்பிர வேசம் அதிகரித்து விட்டதாக கல்விமான்கள், புத்திஜீவிகள், உள்ளூராட்சி தவிசாளர்கள் மத்தியில் பேசப்படும் விடயங்க ளாக இன்று மாறிவிட்டன.

ஒருபுறம் குடிநீரில் கழிவு ஒயில் பிரச்சினை புரையோடி யுள்ளது. இன்னொருபுறம் வலி.தென்மேற்கில் கழிவுக் குதம் மனிதனை அழிக்கிறது என்ற பிரச்சினை, மறு முனையில் வலிகாமத்தில் மரபு வழிவந்த மிருகபலி வேள்வி தொடர் பான பிரச்சினை தலைக்கேறிவிட்டது.

இவ்வாறு சகல பிரச்சினைகளும் வலிகாமத்திற்கு ஊடாக கிளம்பிய பிரச்சினைகளா? அல்லது கிளப்பி விடப்படுகின்ற பிரச்சினையா? என்பது ஒருபுறம் இருக்கட்டும் நிபுணர்கள் ஆராயவேண் டும். இன்று இப்பிரச் சினைகள் யாவும் உள்ளூராட்சி சபை சட்ட திட்டங்களுடன் கூடிய பிரச்சினையாக இருப்பதுடன் தவிசாளர் மற்றம் கௌரவ சபை சம்பந்தப்பட்ட பிரச்சினை களாகும் என சிலர் கூறுகின்றனர்.

இங்கு தற்போது வெளிக்கிளப்பப்பட்டுள்ள பிரச்சினை வேறு ஒன்றுமல்ல மானிப்பாய், தெல்லிப்பளை, சங்கானை சுகாதார வைத்திய அதிகாரிகளால் வடமாகாண சபைக் கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் வேண்டுமென்று சில சட்டங்களை திணித்து தாங்கள் வீரவான்கள், சட்டமேதை கள் எனக் காட்ட முற்படுவது தான் இங்கு முதன்மை பெறு கின்றது.

கொல்களம் மற்றும் மிருகபலியிடல் தொடர்பாக பிரதேச சபை தவிசாளர்கள் தமக்குள்ள சட்ட அதிகாரங்கள் ஏற் கனவே உள்ள நீதிமன்ற தீர்ப்பு பிரகாரம் மிருகபலி இடலுக் கான அனுமதி - அங்கீகாரத்தை தற்துணிவின்படி வழங்கு கின்றனர்.

ஆனால், கொல்களத்திற்கும் ஒரு நாள் வேள்வி யாகத் திற்கும் விடயம் புரியாத சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் தற்காலிக கொல்கள நடைமுறை என்பதனை கொண்டு வந்து ஆலயத்தையும், மக்களையும், கேலி செய்யும் விடயமாக வைத்திய அதிகாரிகளும், அவர்களின் கீழ் விடயம் புரிந்தும் தலையாட்டும் சுகாதார வைத்திய அதிகாரி களும் பொது சுகாதார பரிசோதகர்கள் செயற்படுவதனை நினைத்தால் கவலைய்யுறுவதாக நீதிமன்றில் வேலை செய்யும் உயரதிகாரி கவலையுடன் தெரிவித்துள்ளார்.

இது ஒரு புறம் இருக்க மிருக பலி இடம்பெறும் ஆல யங்களில் சிமெந்திலான நிலம் இழுக்கவேண்டும். வெட்டப் படும் சகல கிடாய்களும் [கடா, கோழிகளும்] அங்கேயே உரிக்க வேண்டும், அதற்கு அங்கேயே சீல் குத்த வேண்டும். ஆடு வெட்டுபவர் - மருத்துவ சான்றிதழ் எடுக்கவேண்டும். இதனைவிட கழிவு வாய்க்கால், கழிவு தொட்டி கூடாரம், மறைப்பு, வெட்டும் கத்திக்கு ஸ்பிரிட் பூசுதல் என்றெல்லாம் 20 இற்கும் மேற்பட்ட தற்காலிகமான (Tem.Act) சட்டத் திற்குப் புறம்பாக இயற்றப்பட்ட சட்ட திட்டங்களை மானிப் பாயில் வைத்து விரிவாக விளக்கியுள்ளதாக சபையின் கௌரவ உறுப்பினர்களும் கருத்து வெளியிட் டுள்ளனர். இவர்கள் பற்றியும் ஆராய்ந்துள்ளனர்.

இவ்வாறாக வலிகாமத்தில் இன்று நேற்ற மட்டும் அல்ல இன்றைக்கு 300 வருட கால பழமைவாய்ந்த 9 இற்கும் மேற்பட்ட ஆலயங்களில் இந்த மரபு வழி கேள்வி யாகம் மிருக பலியிடல் சமய நம்பிக்கைகள் முன் நடாத்தப்படு கின்றன.

வரலாற்றுச் சிறப்புக் கொண்ட கவுணாவத்தை வைரவர் கோவிலிற்கு அழிக்க முடியாத வர்த்தமானி அறிவித்தல் (Ga33ttle) பத்திரிகை சட்டமூலம் அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

இதேபோல பிரான்பற்று புளியடி வைரவர் ஆலய வரு டாந்த வேள்வியும் பல சிறப்புக்களை நூற்றாண்டு காலமாக கொண்டு விளங்குகின்றது. இவ்வாறாக பல சமய விழு மியங்களுடன் ஆலய வழிபாடு, மிருகபலியிடல் என்பன சமூகங்களின் வாழ்வியலோடு ஒட்டிப்பிறந்துள்ளது.

இதற்கான அனுமதி நடைமுறைகள் உள்ளூராட்சி முன் உள்ள பிரச்சினை. இதனை பொதுச் சுகாதார பரிசோத கர்கள், மூன்று சுகாதார வைத்தியர்கள் (3 -MOH) பிழை யாக வழிநடாத்தி சமூகத்தை சீரழிக்க முற்பட்டால் கடவுள் தான் இவர்களை காப்பாற்ற வேண்டும்.

அத்துடன் இவர்களையும் இடமாற்ற வேண்டும் என்பது பொது விதியாகும். எதிர்வரும் காலங்களை பொறுத்தி ருந்து பார்ப்போம்.

**க.வெ.நாகதேவன்**
**ஓய்வுபெற்ற அரச அலுவலர்**
**இளவாலை.**

(3).ரூ.46 பெறுமதியான சகல தேங்காய்களையும் விற்றுப்பெற்ற பணம் = ..............................

(4).ரூ.46 பெறுமதியான தேங்காய்களின் எண்ணிக்கை = ..............................

(5).ரூ.48 பெறுமதியான தேங்காய்களின் எண்ணிக்கை = ..............................

(6).குவியலில் உள்ள சகல தேங்காய்களையும் விற்றுப்பெற்ற பணம் = ..............................

(15).தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்காக்கி வசனத்தை அமைக்கவும்

62.உண்டபின் / உணவு / வேண்டும் / பற்களை / நன்கு / துலக்க

..............................................................................................

63.காற்று /பட்டம் / விசவிச / போகும் / உயரஉயரப்

..............................................................................................

(16).சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்

64.நீல நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் சமமாக கலந்தால் கிடைக்கும் நிறம்
(1).சிவப்பு (2).பச்சை (3).நாவல்

65.மீன்கள் தங்கள் வாலினால்
(1).நிற்கும் (2).நீந்திச்செல்லும் (3).தாம் செல்லும் திசையை திருப்பும்

66.சூரியன் உள்ள தினத்தில் உமது நிழல் பகல் 10.00 மணிக்கு எத்திசையில் காணப்படும்?
(1).வடக்கு (2).தெற்கு (3).மேற்கு

(17)."பூத்துக்குலுங்கும் மரங்களில் வண்டுகள் அங்கும் இங்கும் பறந்து திரியும் அழகே அழகு" இத்துடன் ஆரம்பித்து 4 கருத்துள்ள வசனங்களை எழுதுங்கள்

67..............................................................................................

68..............................................................................................

69..............................................................................................

70..............................................................................................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (01).01.கிரேக்கம் | 02.டன்கன்வைட் | 03.தங்கம்,வெள்ளி,வெண்கலம் | | 04.ஓட்டப்போட்டி |
| 05.அமெரிக்கா | 06.சீனா,ஐக்கியஅமெரிக்கா | | 07.1.ஐக்கியஅமெரிக்கா | 2.ஐக்கிய இராச்சியம் |
| 08.1.அமெரிக்கா | 2.லண்டன் | 09.1.வெளிநாடு | 2.தோல்வி | 10.1.விருத்தி |
| 2.தொடக்கம் | 11.1.இந்தியா | 2.சவுதிஅரேபியா | 3.இந்தியா | (02)12.Letters |
| 13.Toes | 14.Nails | 15.Green colour | (03).16.பிழை | 17.பிழை |
| 18.சரி | 19.சரி | 20.சரி | 21.சரி | 22.சரி |
| (04).23 . | 24.! | 25." ?" | 26.! | 27." " |
| (05).28.4 | 29.1 | 30.5 | 31.2 | 32.3 |
| (06).33.E | 34.C | 35.D | 36.B | 37.A |
| (07).38.5 | 39.மாப்பொருள் | 40.1.கடலை | 2.பயறு | 3.அரிசி |
| 41.சோறு,சம்பல் | 42.வற்றாளை,தேங்காய்ப்பூ | | 43.1.கடலை | 2.பயறு |
| 44.1.ரொட்டி | 2.சோறு | 45.140 | 46.15/140 | |
| 47.சிங்களத்தில் எழுதவும் | | (08).48.3 | | 49.3 |
| 50.1 | 51.3 | 52.2 | 53.1 | 54.1 |
| 55.3 | 56.1 | 57.3 | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

(01).கீழே உள்ள பந்தியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

விபத்துக்கள் பல வகைப்படும் வீட்டில், பாடசாலையில், பாதையில், மைதானத்தில், என பல இடங்களில் விபத்துக்கள் ஏற்படலாம். விபத்துக்கள் ஏற்பட கவனயீனமே காரணம் எனலாம். பொது விதிகளைக் கவனித்து நடந்தால் விபத்துக்களைக் குறைக்கலாம். விபத்துக்கள் ஏற்பட்டால் முதலுதவி செய்தல் அவசியம் முதலுதவி செய்வதற்கு அது தொடர்பான அறிவும் பயிற்சியும் போதியளவு இருத்தல் வேண்டும். பூரணமான முதலுதவிப் பெட்டி ஒன்று கட்டாயமாக இருத்தல் அவசியம்

01.வீதியில் எப்பக்கமாக நடக்க வேண்டும்? ..............................

02.செஞ்சிலுவைச் சங்கத்தினரின் முக்கிய கடமை ஒன்றை எழுதுக..............................

03.வீட்டில் ஏற்படக்கூடிய விபத்து ஒன்றை எழுதுக..............................

04.நான் நேற்று சமையலறையில் வேலை செய்து கொண்டிருக்கும் போது எனது கை வெட்டுப்பட்டு .............................. கசிந்தது

05.முதலுதவிப் பெட்டியில் இருக்க வேண்டிய பொருள் ஒன்றை எழுதுக ..............................

(02).பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக

06.சுத்தம் சுகம் தரும் ( )

07.தாவரங்கள் வளியைச் சுத்தப்படுத்துகின்றன ( )

08.பாடசாலையை சுத்தமாக வைத்திருக்கத் தேவையில்லை ( )

09.வகுப்பறையை அழகாக வைத்திருத்தல் வேண்டும் ( )

(03).பின்வரும் சொற்களின் சிங்களக் கருத்தை சிங்களத்தில் எழுதுங்கள்

10.பாய் .............................. 11.நேரசூசி ..............................

(04).பின்வரும் நிறுத்தற்குறிகளின் பெயர்களை எழுதுக

12.! .............................. 13.? .............................. 14., ..............................

(05).வலப்பக்கத்து சொற்களை பொருத்தமான இடப்பக்க கூற்றுகளுடன் இணைக்க

| | |
|---|---|
| 15.கொம்பு | A - வேலையை இலகுவாக்க உதவும் |
| 16.தப்பு | B - மருந்துப்பயிர் |
| 17.இஞ்சி | C - தொட்டற்கருவி |
| 18.கத்தரிக்கோல் | D - மருந்துப்பொருள் |
| 19.பெனடோல் | E - உறுப்பு |

(06).பின்வரும் பகுதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புங்கள்

20.அறம் செய்ய (i) .............................. ஆறுவது சினம்

(ii).............................. ஈவது விலக்கேல்

(07).பின்வரும் சொற்களின் கருத்தைத் தரும் தமிழ்ச்சொல்லை தமிழில் எழுதுங்கள்

21.Lion .............................. 22.Ants ..............................

23.Deer .............................. 24.New year ..............................

**(08).பின்வரும் கடிதத்தை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

மேட்டுத்தெரு
டன்சினன் தோட்டம்.
பூண்டுலோயா
2015.01.05

அன்பின் குட்டி மாமா,

இம் முறைத்தவணைப் பரீட்சையிலும் நான் முதலிடத்தைப் பெற்று விட்டேன். அம்மாவுக்கும் மிக்க மகிழ்ச்சி, உங்களுக்கும் சந்தோசம் தானே நான் முதலாவதாக வந்ததாலே நீங்கள் என்னை மன்னாரிலுள்ள மடுக்கு கூட்டிச் செல்வதாக கூறினீர்கள் தானே என்னை அங்கு கூட்டிச் செல்வீர்கள் தானே

இப்படிக்கு.
உங்களன்பு மகள்
செல்வினி

25.இக்கடிதத்தை ஏன் எழுதி உள்ளாள்? ..............................

26.மகிழ்ச்சி என்பதன் கருத்துள்ள இன்னுமொரு சொல்லை எழுதுக ..............................

27.இதற்கு முந்தியத் தவணையிலும் செல்வினி வகுப்பில் முதலிடத்தைப் பெற்றாளா? ..............................

28.மடுக்கோயில் எங்கு உள்ளது? ..............................

29.திருக்கேதீஸ்வரம் எங்கு உள்ளது? ..............................

30.இலங்கையின் அதி உயர்ந்த மலைச்சிகரம் எந்த மாவட்டத்தில் உள்ளது? ..............................

**(09).கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக**

31.வீட்டில் இருந்து வடக்குத் திசையில் 100m தூரம் சென்ற சங்கர் தனது இடதுகைப் பக்கமாகத் திரும்பி மீண்டும் 100m சென்றார். வீட்டிற்கு எத்திசையில் அவர் இருக்கிறார்? ..............................

32.7.30 மணிக்கு A யில் இருந்து புறப்பட்டு 8.45 மணி வரை மணிக்கு 40m என்னும் சீரான வேகத்தில் ஓடி B ஐ அடைந்தால் A க்கும் D க்கும் இடையே உள்ள தூரம் என்ன? ..............................

33.10cm நீளமும் 10cm அகலமும் கொண்ட துணித்துண்டிலிருந்து 1cm நீளமும் 1cm அகலமும் கொண்ட எத்தனை துண்டுகளை வெட்டலாம்? ..............................

34.1kg இல் எத்தனை 50g கள் உண்டு? ..............................

35.எண்கோலத்தைக் கண்டு இடைவெளியை நிரப்புங்கள்

(1).1,10,100 .............................. (2).5,15,45..............................

36.24 மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் முறையில் எழுதுக

(1).மு.ப.10.50 ..............................

(2).பி.ப.2.30..............................

**(10).சுருக்க விடை தருக**

37.சிவனொளிபாதமலைக்கு ஏன் மாலையில் ஏறுவார்கள்? ..............................

38.கம்பராமாயணத்தில் இராமனின் தம்பியின் பெயர் என்ன? ..............................

39.ஒன்றுக்கும் பத்துக்கும் இடையில் எத்தனை ஒன்றை எண்கள் உண்டு ..............................

40.50ரூபாவில் எத்தனை இரண்டு ரூபாக்கள் உண்டு? ..............................

41.எத்தனை வயதில் இருந்து வாக்களிக்கும் உரிமை கிடைக்கும்? ..............................

42.பி.ப.1.35 மணியை 24 மணித்தியாலக் கடிகாரத்தில் எப்படிக் காணலாம் ..............................



**(11).பின்வரும் கூற்றுக்களின் கருத்தை எழுதுக**

43.ஆப்பிழுத்த குரங்கு ..............................

44.கிணற்றுத் தவளை ..............................

**(12).சரியான விடையின் கீழ் கோடிடுங்கள்**

45.புரதம் அதிகமாக உள்ள உணவு
(1).அரிசி (2).பயறு (3).புடோல்

46.அகம் என்பதன் கருத்தைத்தரும் சொல்
(1).சுத்தம் (2).உணவு (3).உள்ளம்

47.முலையூட்டி ஒன்று
(1).காகம் (2).நண்டு (3).வௌவால்

48.கடலில் இருந்து வந்து கடற்கரையில் முட்டையிடுவது
(1).திமிங்கலம் (2).கடல்ஆமை (3).நண்டு

49.இரும்புச்சத்துக் குறைவினால் ஏற்படும் நோய்
(1).குருதிச்சோகை (2).நீரிழிவு (3).அழற்சி

50. படத்தில் காட்டப்பட்டுள்ள குண்டூசியை பக்கத்தில் உள்ள ஆணி கவர வேண்டுமாயின்



(1).இன்னும் அதிகமான குண்டூசிகள் தேவை
(2).ஆணியில் காந்த சக்தி இருக்க வேண்டும்
(3).ஆணியின் இருபுறமும் மின்கலங்கள் வைக்கப்பட வேண்டும்

51.இலங்கையில் மழைவீழ்ச்சி அதிகமான இடம்
(1).கொழும்பு (2).கண்டி (3).வட்டவல

52.இலங்கையில் வெப்பம் குறைவான நகரங்கள்
(1).காலி, கொழும்பு, மாத்தறை
(2).நீர்கொழும்பு, புத்தளம், குருணாகல்
(3).நுவரெலியா, கந்தப்பொலை, ஹற்றன்

53.எனது வகுப்பாசிரியர்
(1).பெரிய அறிவை உடையவர்
(2).கூரிய அறிவை உடையவர்
(3).நல்ல அறிவை உடையவர்

**(13).பின்வரும் சிங்களச்சொற்களின் கருத்தைத் தரும் தமிழ்ச்சொல்லை தமிழி எழுதுங்கள்**

54.வரகா .............................. 55.ஓலு ..............................

56.பபுவ.............................. 57.கலை ..............................

**(14).பின்வரும் பந்தியின் உதவியுடன் கீழ்வரும் வினாக்களுக்கு விடையை தருக**

தேங்காய்க் குவியல் ஒன்றில் 45, 46, 48 ரூபாய்களுக்கு தேங்காய்கள் உள்ளன. ஆனால் மிகக்குறைந்த விலை கொண்ட தேங்காய்களின் எண்ணிக்கையைப் போல் இரு மடங்கு காய்கள் விலை அதிகமான தேங்காய்களில் உள்ளன. 45 ரூபா விலை உள்ள தேங்காய்கள் 100 உண்டு

58.45 ரூபா தேங்காய்கள் எல்லாம் விற்கப்பட்டால் எத்தனை ரூபா கிடைக்கும்? ..............................

59.48 ரூபா பெறுமதியான தேங்காய்கள் எத்தனை? ..............................

60.46ரூபா, 48ரூபா தேங்காய்கள் சமனாயின் மூன்று பகுதிகளிலும் உள்ள மொத்த தேங்காய்களின் எண்ணிக்கை? ..............................

61.தேங்காய்கள் அனைத்தும் விற்றுப் பெறும் இலாபத்தின் அடிப்படையில் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

(1).ரூ.45 பெறுமதியான தேங்காய்களின் எண்ணிக்கை ..............................

(2).ரூ.45 பெறுமதியான சகல தேங்காய்களையும் விற்றுப் பெற்ற பணம் ..............................

# காணாமற் போனவர்களை கண்டறிய பாதுகாப்பு அமைச்சு ஒத்துழைக்கவில்லை

## வெளிக்கிளம்பும் கண்டனம்

காணாமற்போனோர் குறித்த விசாரணைக்கு பாதுகாப்பு மற்றும் நீதி அமைச்சுக்கள் ஒத்துழைக்கவில்லை என்று காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக, ஆணைக்குழுவினால் ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள், அகதி முகாம்கள் அல்லது புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள். பற்றிய விபரங்களை வெளியிடுமாறு காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவினால், நீதி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சுக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சிறப்பு அதிபர் ஆணைக்குழு விசாரணை சட்டத்தின் கீழ், ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை முன்னிலையாகும்படி கோரிய போதிலும், இந்தக் கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்படாதது வருத்தமளிக்கிறது.

ஆணைக்குகுழுவுக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகளின்படி, விடுதலைப் புலிகள், பாதுகாப்புப்படைகள், ஆயுதக் குழுக்கள், அடையாளம் தெரியாத குழுக்களுக்கு எதிராக பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டது, கடத்தப்பட்டது, குற்றச்சாட்டுகளின்றி கைது செய்யப்பட்டது போன்ற குற்றச்சாட்டுகள், சுமத்தப்பட்டுள்ளன.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், இத்தகைய சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூற அல்லது பொறுப்பேற்க வேண்டிய தரப்புகள் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடுகிறது.

வடக்கு மாகாணத்தில், காணாமற்போன சம்பவங்களுக்கு, விடுதலைப் புலிகள் 60 வீதமும், அரசபடையினர் 30 வீதமும், ஆயுதக் குழுக்கள் 5 வீதமும், அடையாளம் தெரியாத குழுவினர் 5 வீதமும் பொறுப்பாக இருந்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

பலவந்தமாக காணாமற்போகச் செய்யபட்டது, கடத்தப்பட்டது தொடர்பாக பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கு எதிராக உறவினர்களால் வாய்மூல சாட்சியங்களை அளித்துள்ளனர்.

இது நீதித்துறை சார் நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபரின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட வேண்டும்.

பொதுஅமர்வுகளில் அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், மோசமான சம்பவங்கள் குறித்து ஆழமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இவற்றுள் 1990 இல் நடந்த சத்துருக்கொண்டான், கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலைகள், அம்பாறையில் 1990 இல் 600 பொலிஸார் படுகொலை செய்யப்பட்டது, குருக்கள்மடத்தில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டது ஆகிய சம்பவங்கள் உள்ளடங்கும்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, சிறப்பு விசாரணைக் குழுவொன்றை நியமித்து, இவற்றுக்குப் பொறுப்பான நபர்கள் அல்லது கட்டளையிட்ட அமைப்புக்கு எதிராக உள்நாட்டு சட்டங்களின் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணைக்குழு இடைக்கால அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது.

மரணச் சான்றிதழ்களை வழங்குவதற்கும், குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் சாத்தியமான நடவடிக்கைகளை விரைவாக நடவடிக்கை எடுக்குமாறும, உள்ளூர் அதிகாரிகளை ஆணைக்குழு கேட்டுக்கொண்டது.

வடக்கு, கிழக்கில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, விரிவான உளநல ஆலோசனை மற்றும் சமூக உதவிகள் வழங்குவது குறித்தும், ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஆணைக்குழுவின் செயற்பாட்டுப் பரபபை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, 2014 ஜுலையில் விரிவாக்கி, போர்க்குற்றச்சாட்டுகள் மற்றும் அனைத்துலக மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்தும் விசாரிக்க பணிததிருந்தார்.

இதுதொடர்பாக, வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவும் நியமிக்கப்பட்டது.

இந்த ஆணை தொடர்பான அறிக்கை, வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்படும். அது தனியான அறிக்கையாக சமர்ப்பிக்கப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## ஜோன்கெரிக்கு ஆச்சரியம்

இலங்கையில் 100 நாள் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட பணிகள் குறித்த அறிக்கையைப் பார்த்து அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி திகைத்துப் போனதாக தெரிவித்துள்ளார். அமைச்சரவை பேச்சாளரான ராஜித சேனரத்ன.

இந்தக் குறுகிய காலப் பகுதிக்குள் ஒரு அமெரிக்க அதிபரால் கூட இதுபோன்ற பெரும் எண்ணிக்கையான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என்றும் ஜோன் கெரி தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

சில வாரங்களுக்கு முன்னர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்த பின்னரே ஜோன் கெரி இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள தமது தூதரகத்திடம், ஒரு அறிக்கையை கேட்டிருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, ஒரு பக்க அறிக்கையைத் தான் எதிர்பார்த்திருந்தார் என்றும், மூன்று பக்க அறிக்கையைப் பெற்றதும் அவர் அதிர்ச்சியடைந்தார் என்றும் ராஜித சேனாரத்ன கூறினார்.

## துப்பாக்கி மீட்பு

கல்முனை நற்பிட்டிமுனை சிவசக்தி வித்தியாலய கூரையினுள்ளிருந்த T-56 ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கூரை திருத்த வேலைகள் இடம் பெற்றுக்கொண்டிருந்தபோதே துருப் பிடித்த நிலையில் காணப்பட்ட துப்பாக்கி மற்றும் ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடாபில் பாடசாலை நிர்வாகத்தினால் கல்முனை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட மையையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனா.

## உல்லாசப் பயணிகள் மையம் வளலாய் கடற்கரையில்

அச்சுவேலி வளலாய் அக்கரை கடற்கரையினை அழகுபடுத்துவதற்காக வலி.கிழக்கு பிரதேச சபை ஒரு மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது. இப்பிரதேச சபையின் நடவடிக்கையின் மூலம் இக்கடற்கரை பிரதேசம் உல்லாசக் கடற்கரை பிரதேசமாக அழகுபடுத்தப்படவுள்ளது. நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வளலாய் அக்கரை கடற்கரைப் பகுதி கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு மக்கள் குடியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது இக்கடற்கரையில் சவுக்கு மரங்கள் வளர்த்தல், ஓய்வுக் குடில்கள் அமைத்தல், குடிநீர் வசதிகள் ஏற்படுத்தல், மின்சார வசதிகள் ஏற்படுத்தல், உல்லாச இருக்கைகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


### உழவு இயந்திரத்திற்குரிய அழைப்பின் பெயரிலான (On - Call Basis) சாரதி தேவை

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்திற்குச் சொந்தமான உழவு இயந்திரங்களை (இரண்டு மற்றும் நான்கு சில்லு) பல்கலைக்கழகம் கோருகின்ற நாட்களில் செலுத்துவதற்கு அழைப்பின் பெயரில் (on - Call Basis) சாரதி தேவை. சாரதியின் வதிவிடம் கிளிநொச்சி மாவட்டமாக இருப்பது விரும்பத்தக்கது.**

**தகைமைகள்**

1. **தரம் 08 சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**
2. **35 வயதிற்கு உட்பட்டவராகவும் உழவு இயந்திரம் செலுத்துவதில் 3 வருட அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.**
3. **இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களைச் செலுத்துவதற்குரிய சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.**
4. **உழவு இயந்திரங்களை சுழல்கலப்பை மற்றும் பெட்டி என்பவற்றின் இணைப்புடன் செலுத்துவதற்குரிய தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.**
5. **பூரண உடல் ஆரோக்கியத்தினை மருத்துவப் பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.**

தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை 06.05.2015 நண்பகல் 12.00 மணிவரை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நிர்வாகக்கிளை இடமிருந்து அல்லது பிரதிப்பதிவாளர், அறிவியல்நகர், கிளிநொச்சி இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உழவு இயந்திரத்திற்கான அழைப்பின் பெயரிலான (on - call basis) சாரதிக்கான விண்ணப்பம்" என அடையாளமிட்டு 13.05.2015 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் பதிவாளர் த.பெ. எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
16.05.2015

(C/3553)


# போக்குவரத்து ஊழியர்கள் யாழில் ஆர்ப்பாட்டம்



ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்த அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினை ஏற்படுத்த முயற்சிக்கின்றதனால், இந்த அரசு தேவையில்லை என இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் தெரிவித்தனர்.

வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபையினை இரண்டு பிராந்தியங்களாக பிரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை போக்குவரத்து சபை பேருந்து ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் சுமார் ஒரு மணித்தியாலங்கள் யாழ். சாலை முன்பாக தமது ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

அதன்போது, இலங்கை போக்குவரத்து சபை சாரதிகள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், வடகிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் எவ்வளவோ துன்பத்தின் மத்தியில் வாழ்கின்றார்கள்.

அவ்வாறு இருக்கும் போது, வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபையினை வன்னிப் பிராந்தியம், யாழ்.பிராந்தியம் என்று மகளிர் விவகார அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் பிரித்துள்ளார்.

இவ்வாறான ஒரு விடயம் ஊழியர்கள் மட்டுமன்றி தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பு மட்டுமன்றி மக்கள் மத்தியில் விரக்தியும் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறான செயற்பாடு முன்னெடுக்கப்பட்ட நிலையில், உடனடியாக அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

தற்போதைய அரசின் கீழ் இலங்கை போக்குவரத்து சபையின்-வடபிராந்தியத்தில் 7 பிரிவுகள் இருக்கின்ற வகையில், தற்போதைய அரசு வடபிராந்தியத்தினை இரண்டு பிரிவுகளாக பிரித்துள்ளதென்பது கவலைக்குரிய விடயம் என்றும் சுட்டிக்காட்டினார்கள்.

அரசின் கீழ் உள்ள அமைச்சர் ஒருவர் வடபிராந்திய முகாமையாளர், அஸ்கர் செய்த ஊழல்களை மறைப்பதற்காக இரண்டு பிராந்தியங்களாக பிரிப்பதற்கு உறுதுணையாக நின்று பிரித்துள்ளார்.

இவ்வாறு போக்குவரத்தினை இரண்டு பிரிவுகளாக பிரிக்க நினைக்கின்றவர்கள். இலங்கையை இரண்டு பிரிவுகளாக பிரிக்கவும் வாய்ப்பு இருக்கின்றது என்றும் குற்றஞ்சாட்டினார்கள்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி யாழ்.மாவட்டத்தில் தமது பிரிவினை ஏற்படுத்தி மக்களை பிரிப்பதற்கு முனைகின்றதாகவும் குற்றஞ்சாட்டினார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போக்குவரத்து துறையில் பிரிவினை ஏற்படுத்தினால், ஏனைய துறைகளிலும் பிரிவினை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

புதிய அரசின் கீழ் இவ்வாறு பிரிவினை ஏற்படுத்தியுள்ளமை தமிழ் மக்களின் சுயமரியாதையினை இழந்தமைக்கு சமம் என்றும், இவ்வாறு பிரிவினை ஏற்படுத்தும் அரசாங்கம் எமக்கு தேவையில்லை.

வடபிராந்திய போக்குவரத்து சபையினை இரண்டாக பிரிப்பதனை அரசாங்கம் நிறுத்தாவிட்டால், தமது போராட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் மேலும் தெரிவித்தனர். (25)

# ஏமன் போரில் 1080பேர் பலி

## - உலக சுகாதார அமைப்பு தகவல்





ஏமனில் கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வரும் உள்நாட்டு போரின் போது 50 குழந்தைகள் உட்பட 1080 பேர் பலியாகி இருப்பதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. சவுதி அரேபியாவை ஒட்டியுள்ள ஏமன் நாட்டில் உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. ஆளும் சன்னி அரசுக்கு எதிராக சிறுபான்மை ஹவுதி பழங்குடியினர் ஆயுத போராட்டம் நடாத்தி வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் ஷியா பிரிவை சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ஈரான் அரசு உதவி அளித்து வருகிறது. ஏமன் அரசு படைகளுக்கு ஆதரவாக சவுதி அரேபியா வான்வழி தாக்குதலை நடாத்தி வந்தது. நேற்று முன்தினம் இந்தத் தாக்குதலை நிறுத்திக் கொளவதாக அறிவித்தது. ஆனால் கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

கிளர்ச்சியாளர்கள் போரை நிறுத்தாவிட்டால் மீண்டும் தாக்குதல் நடாத்துவோம் என சவுதி அரேபியா எச்சரித்துள்ளது. இதறகிடையில் கடந்த ஒரு மாதம் நடைபெற்ற உள்நாட்டு போரில் மொத்தம் 1080 பேர் பலியாகியிருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதில் 28 பெண்கள் மற்றும் 50 குழந்தைகளும் அடங்குவர். சுமார் 4 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர். ஏமன் நாட்டின் சுகாதாரத் துறை கொடுத்துள்ள கணக்கு இது என்றும் மருத்துவமனைக்கு கொண்டுவரப்படாத சடலங்களையும் கணக்கில் சேர்த்தால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என உலக சுகாதார அமைப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# போதைப்பொருள் கடத்தல் 10 கைதிகளுக்கு மரண தண்டனை

பிரான்ஸ் மற்றும் ஐ.நா அதிகாரிகள் விடுத்துள்ள முறையீட்டை மீறி 10 கைதிகளுக்கு மரண தண்டனைய்ய இந்தோனேஷிய அரசு நிறைவேற்ற தயாராக உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. பிரான்ஸ், அவுஸ்ரேலியா, நைஜீரியா உள்ளிட்ட 9 வெளிநாடுகளைச் சேர்ந்த 10 நபர்களை போதைப்பொருள் கடத்தியதாக கடந்த 2005ஆம் ஆண்டு இந்தோனேஷிய பொலிஸார் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டோருக்கே தற்போது மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

உலகச் செய்திகள்

# தப்பியோடிய அகதிகள் ரயிலில் மோதி உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் மற்றும் சோமாலியா நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு தரைவழியாக சென்ற 14 அகதிகள் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளனர்.

கடல் மார்க்கமாக ஐரோப்பிய நாடுகளுக்கு தஞ்சம் கோரி செல்வதில் பெரும் உயிரிழப்பு ஏற்படுவதை தவிர்க்க ஆப்கானிஸ்தான் மற்றும் சோமாலியாவை சேர்ந்த சுமார் 50 அகதிகள் தரைவழியாக நேற்று முன்தினம் நள்ளிரவு புறப்பட்டனர். Macedonian நாட்டில் உள்ள (Veles) நகர ரயில் தண்டவாளம் வழியாக அகதிகள் கும்பலாக சென்றுள்ளனர் அப்போது தெற்கு மெஸிடோனியா விலிருந்து (Gevgelija) நகருக்கு, சர்வதே ரயில் ஒன்று அதிவேகத் தில் வந்துள்ளது.

ஆனால் ரயில் வருவதை அறியாத அகதிகள் குழு அங்குள்ள சந்திப்பு பகுதியை (Level Crossing) கடக்க முயன்றனர். இந் நிலையில் தண்டவாளத்தில் நபர்கள் கடப்பதை அறிந்த ரயில் ஓட்டுனர், 'சைரன்'(Siren) ஒலியை எழுப்பி எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனை கேட்ட சிலர், அலறி அடித்துக்கொண்டு சிதறி ஓடியுள்ளனர். எனினும் அதேவேகமாக வந்த ரயில் 14 பேர் மீது மோதிச் சென்றதில், அவர்கள் அதே இடத்தில் பலியாகினர்.

இந்தச் சம்பவத்தை அறிந்து வந்த Veles மீட்புக் குழுவினர், தண்டவாளத்தில் இறந்து கிடந்த நபர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்தில் இறந்த 14 பேர்களை தவிர வேறு யாருக்கும் காயம் ஆகவில்லை என மீட்புக் குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை லிபியாவிலிருந்து இத்தாலிக்கு கடல் வழியாக படகுகளில் வந்த சுமார் 1,000 அகதிகள் விபத்தில் இறந்துள்ள நேரத்தில், தரை மார்க்கமாக ஐரோப்பா நோக்கிப் புறப்பட்ட 14 அகதிகள் ரயில் மோதி இறந்துள்ளமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# நேபாளத்தில் பயங்கர நிலநடுக்கம்; 400 பேர் புதையுண்டிருக்கலாமென அச்சம்



நேபாளத்தில் நேற்று பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டதில் அதிகளவில் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டு(Kathmandu) நகரின் மேற்குப் பகுதியை மையமாகக் கொண்டு நேற்று முற்பகல் 11.44 மணியளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 7.9 அலகுகளாகப் பதிவாகி இருந்தது என அமெரிக்காவின் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலநடுக்கத்தால் காத்மண்டு உள்ளிட்ட பல இடங்களில் கட்டடங்கள், கோவில்கள் இடிந்து விழுந்து மண்ணோடு மண்ணாக புதைந்தன. இதில் பயங்கர உயிர் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்த பயங்கர நிலநடுக்கத்தால் தலைநகர் காத்மண்டுவில் இருந்த 19ஆம் நூற்றாண்டு பழமையான 9 மாடிக் கட்டடமான "த்ரகரா"(Dharara) கோபுரம் முழுமையாக இடிந்து விழுந்தது. இதில் அங்கிருந்த 400 பேர் மண்ணோடு மண்ணாக புதையுண்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.


இச்சம்பவத்தால் காத்மண்டு விமான நிலையம் உடனடியாக மூடப்பட்டது. அதுமட்டுமன்றி நேபாளம் முழுவதும் கைப்பேசி சேவை முடங்கிப் போயுள்ளது.

மேலும் சாலைகள் பள்ளம் பள்ளமாக வெடித்துச்சிதறிக்கிடப்பது மட்டுமன்றி பல இடங்களில் கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

தற்போது நிலநடுக்கத்தால் படுகாயமடைந்தோர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையே நிலநடுக்க அதிர்வுகளால் அந்நாட்டு மக்கள் பெரும் அச்சத்தில் உறைந்து போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# குழந்தையைக்காப்பாற்றிய தமிழர்களுக்கு விருது



சிங்கப்பூரில் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து தவறி விழுந்து தொங்கிய குழந்தையின் உயிரை காப்பாற்றிய தமிழர்களுக்கு சிங்கப்பூர் சிவில் பாதுகாப்புப் படை விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

சிங்கப்பூரின் ஜோராங் கிழக்கு தெரு கவுசிங் போர்டில் உள்ள 371 ஆவது வீட்டில், குழந்தை ஒன்று 2ஆவது மாடியின் கம்பித்தடுப்பைத தாண்டி வந்தபோது அக்குழந்தையின் தலைப்பகுதி கம்பிகளுக்கு இடையில் மாட்டியுள்ளது. மேலே எழ முடியாமல், கம்பியிலிருந்து விடுபடவும் முடியாமல் அந்தரத்தில் தவித்த அந்தக் குழந்தை கத்தி அழுதது. குழந்தையின் அலறலைக் கேட்ட அக்கம்பக்கத்தினர் குழந்தையைக் காப்பாற்ற முயற்சி செய்துள்ளனர்.

இருவர், இரண்டாம் மாடிக்கு ஏற முயற்சித்தும் முடியாமல் போனது. இதனால் தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கப் பட்டது. அப்போது அந்தப் பகுதியில் சாலை பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டு இருந்த தொழிலாளர்கள் இருவர் குழந்தையின் அழுகுரலைக்கேட்டு அங்கு வந்தனர். உடனடியாக இருவரும் இரண்டாவது மாடிக்கு ஏறி, அந்தக் குழந்தையை கம்பியின் பிடியிலிருந்து விடுவித்து காப்பாற்றினர்.

தீயணைப்பு வீரர்கள் வருவதற்குள்ளாகவே குழந்தை காப்பாற்றப்பட்டது. ஏணியின் உதவியுடன் குழந்தை கீழே அழைத்து வரப்பட்டது. குழந்தை எப்படி அங்கு சென்று சிக்கிக் கொண்டது என்பது இன்னும் தெளிவாகவில்லை. காப்பாற்றியவர்களில் ஒருவர் சென்னையிலிருந்து சிங்கப்பூருக்குச் சென்று வேலை செய்து வரும் சுப்பிரமணியன் சண்முகநாதன் என்று தெரியவந்துள்ளது. மற்றொருவர் பொன்னன் முகுந்த் குமார் எனவும் தெரியவந்துள்ளது.

குழந்தையைக் காப்பாற்றிய இருவரையும் சிங்கப்பூர் அரசின் உள்நாட்டுப் பாதுகாப்புப் படை, "உத்வேக மக்கள் விருது" எனும் விருதினை வழங்கியுள்ளது.

# மகிழ்ச்சியான நாடுகளில் சுவிட்சர்லாந்திற்கு முதலிடம்

சர்வதேச அளவில் மகிழ்ச்சியாக உள்ள நாடுகளில் சுவிட்சர்லாந்து முதல இடம் பிடித்துள்ளதாக ஆய்வின் முடிவுகள் வெளியாகியுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் "உலக மகிழ்ச்சி நாள்" மார்ச் மாதம் 20ஆம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்நாளில், சர்வதேச அளவில் அனைத்து துறைகளிலும் முன்னேறி மகிழ்ச்சியாக உள்ள நாடுகளின் பட்டியலை சேகரித்து 'உலக மகிழ்ச் சியான நாடுகள் அறிக்கை' வெளியிடப்படும்.

2012ஆம் ஆண்டு முதல் மூன்று முறை இது போன்ற ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது, 2015 ஆண்டிற்கான மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலை ஐக்கிய நாடுகள் கடந்த வியாழக்கிழமை நியூயோர்க் நகரில் வெளியிட்டது. இந்த அறிக்கையில் 2013ஆம் ஆண்டு மூன்றாவது இடத்தில் இருந்த சுவிஸ் 2015ஆம் ஆண்டு முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

2012ஆம் ஆண்டு முதல் இடத்தைப் பிடித்திருந்த டென்மார்க் தற்போது மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

# தேசியக்கொடி அவமதிப்பு பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக கடந்த 23 ஆம் திகதி இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, தேசியக் கொடியை அவமதித்ததாக தெரிவித்து கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்று கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணி ருஷ்தி ஹபீப்பினால் மேற்கொள்ளப் பட்டது.

இதன்போது சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் உட்பட சுசுவு சட்டத்தரணிகள் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்

இதேவேளை மாற்றம் செய்யப்பட்ட தேசியக் கொடியை பயன்படுத்தியமை குறித்து பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக, பொலிஸ ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை பொலிஸாருக்கு இரு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# போலியான கருத்துக்களை முன்வைக்கும் ஊடகங்கள்

## கவலையடையும் ஜனாதிபதி

சுதந்திர ஊடகங்களில் தாய்நாட்டுக்கு எதிராக வெளியிடப்படும் போலியான பிரசாரங்கள் குறித்து தாம் கவலையடைவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

அங்குனுகொலபெலெஸ்ஸ நகரில் இடம்பெற்ற கட்சி மாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் உள்ளக செயற்பாடுகள் மற்றும் அரசியலில் மேற்கத்தேய நாடுகள் தாக்கத்தை செலுத்துவதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 3 மாதங்களுக்குள் தனது தலைமையிலான அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தும் நோக்கில் தான் செயற்பட்டதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே ஊடகங்கள் இதுமாதிரியான செய்திகளை பிரசுரிக்கும் போது மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.


# மோட்டார் சைக்கிளில் இருந்து கஞ்சா பொதி மீட்பு

மன்னார் எழுத்தூர் செம்மண் வீதிப் பகுதியில் உள்ள பற்றையினுள் மோட்டார் சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 5 கிலோ கிராம் நிறை கொண்ட கஞ்சா பொதியை கடந்த வியாழக கிழமை இரவு மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இரவு 7.45 மணியளவில் சந்தேகத்திற்கிடமான முறையில் இருவர் மோட்டார் சைக்கிளில் வருகை தந்ததோடு அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளை அவ்வீதியில் உள்ள பற்றைக்காட்டினுள் மறைத்து வைத்து விட்டு தப்பிச் சென்று விட்டனர்.

இந்த நிலையில், சந்தேகம் கொண்ட அப்பகுதி மக்கள் அவசர பொலிஸ் பிரிவிற்கு உடனடியாக தகவல் வழங்கிய நிலையில் இரவு 9 மணியளவில் அவ்விடத்துக்கு வந்த மன்னார் பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளை மீட்டு சோதனையிட்ட போது, குறித்த மோட்டார் சைக்கிளில் இருக்கைக்கு கீழ் சுமார் 5 கிலோ கொண்ட கஞ்சாப்பொதி காணப்பட்டுள்ளது.

# தூய யூதா ததேயு ஆலய பெருவிழா



பூநகரி பள்ளிக்குடாவில் கோவில் கொண்டுள்ள தூய யூதாததேயு ஆலயப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுத்தலைத் தொடர்ந்து பக்தி பூர்வமாகக் கொண்டாடப்படும்.

கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமான பெருவிழா திருவிழாக்களில் நேற்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை விழா நடந்தேறியது. திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் திருச் சொரூப ஊர்வலம் ஆலய வீதிகளில் இடம் பெற்று ஆசீர்வழக்கலுடன் நிறைவுறுமென பங்குத்தந்தை அருட்பணி பிறாயன் பாலதாலப் அடிகள் தெரிவித்தார்.

பங்குத்தந்தையும் பங்கு மக்களும் தூய யூதாததேயு அருளாசியைப்பெற்றுய்ய அனைவரையும் வருமாறு அன்புடன் அழைத்துள்ளனர். (68)

### குடும்பஸ்தர்..

துக்கொலை செய்யப்பட்டுள்ளதாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சடலம் மன்னார் வைத்தியசாலைக்கு நேற்று இரவு வைக்கப்பட்டிருந்தது. (18)

### உள்ளூராட்சி...

நிறைவடைந்துவிட்டன.

இதன் பின்னர் 234 உள்ளூராட்சி நிறுவனங்களின் நிறைவடைந்த பதவிக் காலங்களை எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி வரை விரிவாக்குவதாக பொது நிர்வாக, உள்ளூராட்சி அமைச்சு சமீபத்தில் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படும் என அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### சில...

குறிப்பாக அமைச்சரவையின் எண்ணிக்கை 30இற்கு வரையறுக்கப்பட்டுள்ள போதும், தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் போது இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த நிலையில் அவ்வாறான விடயங்களுக்கு சீர்திருத்தங்களை முன்வைக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

### இந்திய...

மைச்சர் விவகாரத்தில், அண்மைய நாட்களாக, இத்தகைய இராஜதந்திர நெறிமுறையை கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தப்படவில்லை.

ஏனென்றால், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நெருக்கமான உறவு இருந்து வருகிறது.நெறிமுறைகள் சீராகப் பயன்படுத்தப்படுவதில்லை.

மேலும், கடந்த காலத்தில் இந்தியப் பிரதமர் மோடிக்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் கடிதங்களை எழுதிய போதிலும், அதற்கு கொழும்பு எந்த விதமான எதிர்ப்பையும் வெளியிடவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

### திருத்தங்களை..

அமைப்புச் சபையின் அங்கத்தினராக தொழில் நிபுணர்களுக்கு பதிலாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த கோரிக்கைகள் உள்ளடங்கிய கடிதமொன்று பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதம் நேற்று தேசிய நிறைவேற்றுப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறான திருத்தங்களை முன்வைக்க வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மத்திய செயற்குழுவோ தீர்மானிக்கவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அமைச்சர் ராஜித சேனாரட்னவும் தேசிய நிறைவேற்றுப் பேரவையில் தெரிவித்துள்ளனர்.19ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசியக்கொடி சர்ச்சை எனக்கு எதிரான சூழ்ச்சி

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில், சர்ச்சைக் குரிய சிங்கக் கொடிகளைப் பயன படுத்தியது, ஒரு சூழ்ச்சியாக இருக்கக்கூடும் என்று தெரிவித் துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

காலியில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் இந்த சந்தேகத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்துக்கு வெளியே கடந்த திங்களன்று நடத்தப்பட்ட போராட்டத்திலும், கடந்த வியாழன்று கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு முன்பாகவும் நடத்தப் பட்ட போராட்டங்களில், சர்ச் சைக்குரிய சிங்கக் கொடிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

தேசியக் கொடியில் உள்ள சிறுபான்மைத் தேசிய இனங் களின் அடையாளங்கள் நீக்கப் பட்ட, இந்தக் கொடிகளை, மகிந்த ராஜபக்சவுக்கு ஆதர வான முன்னாள் அமைச்சர் களும் ஏந்தியிருந்தனர்.



இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே, மகிந்த ராஜ பக்ச இது ராஜபக்சக்களுக்கு எதிரான சூழ்ச்சியாக இருக்க லாம் என்று சந்தேகம் வெளியிட் டுள்ளார்.

### நிலநடுக்கத்தால்..

பட்டுள்ள அதேவேளை இந்தியாவிலும், எவரெஸ்ட் மலைப்பகுதியிலும் கட்டடங்கள் இடிந்துள்ளதுடன், பலர் உயிரிழந்தும் உள்ளனர்.

நிலநடுக்கம் மையம்கொண்ட பிரதேசத்தில் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளதாக நேபாள அரசின் தகவல்துறை அமைச்சர் மினேந்திர ரிஜால் தெரிவித்துள்ளார்.

இந்த அழிவினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்பதற்கு நிலநடுக்கம் தொடர்பில் அனுபவமும், சிறப்புத் தேர்ச்சியும் உடைய நிபுணர்களின் உதவிகள் உடனடியாக தமக்குத் தேவைப்படுவதாகவும் அவர் பகிரங்கக் கோரிக்கையொன்றையும் முன்வைத்துள்ளார்.

நேபாளத்தில் மாத்திரம் இதுவரை 1400 பேர் பலியாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதில் கத்மண்டுவில் மாத்திரம் 467 பேர் அடங்குவதாகவும் நேபாளத்தின் தேசிய பொலிஸ் திணைக்கள ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

தலைநகர் காத்மண்டு உட்பட அதனைச் சூழவுள்ள பகுதிகளில் நிலநடுக்கம் காரணமாக தரைமட்டமாகியுள்ள கட்டட இடிபாடுகளுக்கு மத்தியில் சிக்கியுள்ளவர்களை மீட்பதற்கான பணிகளில் மீட்புப் பணியாளர்களும், நேபாள இராணுவத்தினரும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் கத்மண்டுவில் இருந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க பல கட்டடங்கள் முழுமையாக தரைமட்டமாகியுள்ளன.

இதில் கத்மண்டுவின் அடையாளச் சின்னமாக இருந்த தஹ்ஹாரா கோபுரமும் அடங்கும். அதே வேளை இந்த இடிபாடுகளுக்குள் நூற்றுக்கணக் கானோர் தொடர்ந்தும் சிக்கியிருக்கலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தினால் நேபாளத்தின் 40 வீதமா பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. நிலநடுக்கத்தை அடுத்து நேபாளத்தில் அவசர நிலை பிரகடணப்படுத்தப் பட்டுள்ளது. கடந்த 80 வருடங்களின் பின்னர் சக்திவாய்ந்த நிலநடுக்கம் நேபாளத்தில் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் அண்டைநாடுகளான சீனா, இந்தியா, பக்களாதேஷ் நாடுகளில் உணரப்பட்டதுடன், அங்கும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதன்படி சீனாவில் ஐவர் உயிரிழந்ததுடன் 13பேர்காயமடைநதனர் இந்நியாவில் 20பேரும் திபெத்தில் 6பேரும் பங்களாதேஷில் இருவரும் சீன, நேபாள எல்லையில் இரண்டு சீனர்களும் பலியாகி உள்ளனர்.

நேபாள நிலநடுக்கத்தை அடுத்து அங்கு மீட்பு நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு பல்வேறு நாடுகளும் தமது மீட்பு படைகளை அனுப்பியுள்ளன. முன்னர் வந்த செய்தி 18ஆம் பக்கத்தில்.

### ஈடுசெய்யும்...

தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் ஏற்கனவே இருந்துவந்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவ எண்ணிக்கை தொடர்ந்து பேணப்பட வேண்டியது அவசியமெனவும் அரசாங்கத்திடமும், தேர்தல்கள் ஆணையாளரிடமும், எதிர்க்கட்சித் தலைவரிடமும் எமது கட்சி சார்பில் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இன ஐக்கியத்தை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டேன்

## தந்தை செல்வா நினைவுப் பேருரையில் சந்திரிக்கா



(கொழும்பு)

நான் ஆட்சியைப் பொறுப்பேற்ற வேளையில் நாட்டில் காணப்பட்ட அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தந்தை செல்வாவின் 38 ஆவது சிரார்த்த தினத்தை ஒட்டி கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை அவர் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டில் யுத்தம் இல்லை என்பதற்காக சமாதானம் என்றாகிவிடாது என்ற தலைப்பில் ஆற்றிய நினைவுப் பேருரையில்,

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் ஆட்சியைப் பொறுப்பேற்ற வேளையில் நாட்டில் காணப்பட்ட அரசியலில் மாற்றம் ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டேன்.

நாட்டில் வாழ்ந்து வருகின்ற இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் பணியாற்றியிருந்தேன். ஆனாலும் சில பிற்போக்குவாதிகளின் செயற்பாடுகள் காரணமாக அதனை நிறைவேற்ற முடியாது போனது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளைத்தலைவர் சட்டத்தரணி கே.தவராசா தலைமையில் நடைபெற்ற நினைவு கூரல் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கல்விமான், கட்சியின் தலைவர்கள், உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## நேபாள நிலநடுக்கம்

# மீட்பு நடவடிக்கையில் இலங்கை விமானப்படை



நேபாளத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டியுள்ள நிலையில், மீட்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை விமானப்படையினரும் இணைந்துள்ளதாக பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

நேபாளத்தில் நிகழந்துள்ள அனர்த்தத்தினைத் தொடர்ந்து, நேபாளத்திற்கான இலங்கைத் தூதுவரினால் அவசர அழைப்பு இலக்கமொன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 00977985102057 குறித்த தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், நேபாளத்திலுள்ள இலங்கை மாணவர்கள் அனைவரும் பாதுகாப்புடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 400 இலங்கையருக்கு இரட்டை பிரஜாவுரிமை

வெளிநாட்டிலுள்ள 400 இலங்கைப் பிரஜைகளுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவதற்கு பொது அமைதிக்கான அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி அவர்களுக்கான இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

இரட்டைப் பிரஜாவுரிமையைப பெற்றுக்கொள்வதற்கு மேலும் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

விசேட குழுவொன்றின் மூலம் குறித்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவதாகவும் பொது அமைதிக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்

# மகிந்தவிற்கு ஆதரவாக அமைச்சர் ரட்னாயக்க

(கொழும்பு)

பொதுநிர்வாக இராஜாங்க அமைச்சர் சி.பி.ரட்னாயக்க, நேற்று நுவரெலியாவில் வைத்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை வரவேற்றுள்ளார்.

முன்னர் அவர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவை வழங்கினார்.

ரட்னாயக்க, கடந்த மார்ச் மாதத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் புதிய அரசாங்க அமைச்சரவையில் இணைந்து கொண்டார். அதற்குப் பின்னர் அவர் மஹிந்தவுக்கு ஆதரவாக முக்கிய நிகழ்வுகள் எதிலும் பங்கேற்கவில்லை.

இந்தநிலையில் நேற்று அவர் மீண்டும் மஹிந்த ராஜபக்சவை நுவரெலியாவில் வைத்து வரவேற்றுள்ளார்.

# தப்பியோடிய இராணுவ வீரர்கள் இன்று முதல் கைது செய்யப்படுவர்

## இராணுவம் அறிவிப்பு

(கொழும்பு)

சேவையில் இருந்து தப்பிச் சென்ற இராணுவ வீரர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பமாகும் என இராணுவ ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

சேவையில் இருந்து தப்பியோடிய இராணுவ வீரர்கள் சட்ட ரீதியாக இராணுவத்தில் இருந்து விலகுவதற்காக வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலம் நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்நிலையிலேயே இன்று முதல் இவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி குறித்த காலப்பகுதியில் சட்ட ரீதியாக விலகாதவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை இன்று முதல் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொள்வார்கள என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பொது மன்னிப்புக் காலத்தில் இதுவரை 23 ஆயிரத்து 600 பேர் இராணுவத்தில் இருந்து சட்டரீதியாக விலக கோரியுள்ளதாக தெரியவந்துள்ளது.

அவர்களில் 18 ஆயிரத்து 500 பேர் சட்ட ரீதியாக விலக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எஞ்சியவர்களை எதிர்வரும் சில தினங்களில் விலக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர்

# மலிங்கவின் வேகத்தில் சுருண்டது ஹைதராபாத்




ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் மும்பை அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேற்று மும்பையில் நடந்த லீக் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி கப்டன் ரோகித் சர்மா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.


மும்பை அணிக்கு பார்த்திவ் பட்டேல் (17) ஏமாற்றினார். பின் வந்த உன்முக்த் 5 ரன்களில் திரும்பினார். சிறப்பாக செயற்பட்ட சிம்மன்ஸ் (51) அரைச் சதம் விளாசினார். ரோகித் (24), போலார்ட் (33) ஓரளவு கைகொடுத்தனர். பின் வந்தவர்கள் விரைவில் வெளியேற, மும்பை அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுககு 157 ரன்கள் எடுத்தது. சுச்சித் (9), மெக்லினகன் (1) அவுட்டாகாமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பிரவீன்குமார் 3, ஸ்ரெயின் புவனேஸ்குமார் தலா 2 விக்கெட்டை கைப்பற்றினர்.

158 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வோர்னர், நமன் ஓஜா தலா 9 ரன்களில் ஆட்டமிழந்தனர். தவான் 42 ரன்கள் எடுத்தார். லோகேஷ் ராகுல் (25), போபரா (23) நிலைக்கவில்லை. பின் வந்தவர்களும் சொதப்ப, ஹைதராபாத் அணி 20 ஓவரில் விக்கெட்டுக்கு 137 ரன்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் மலிங்க 4, மென்லினகன் 3 விக்கெட்டை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மலிங்க தெரிவானார்.

# பஞ்சாப்பை பஞ்சராக்கியது சென்னை சுப்பர் கிங்ஸ்




துடுப்பாட்டம், பந்துவீச்சு என சகல துறையிலும் ஜொலித்த சென்னை சுப்பர் கிங்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை 97 ஓட்டங்களால் தோற்கடித்தது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய அவ்வணியின் சிமித், மக்கலம் ஆரம்ப வீரர்களாக களமிறங்கி அதிரடியில் கலக்கினர். இதில் சிமித் (26) ஓட்டங்களுடன் வெளியேற ரெய்னா களம் புகுந்தார். மறுமுனையில் மக்கலம் அதிரடி காட்டினார்.

அவரும் (66) வெளியேற டோனி தன் பங்கிற்கு விளாசித் தள்ளினார். இறுதியில் சென்னை அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ரெய்னா (29) ஆட்டமிழக்காமல் டோனி (49), ஜடேஜா (18) ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அனுரீட்சிங், பட்டேல் இருவரும் ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு 193 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு சென்னை பந்துவீச்சாளர் சிம்ம சொப்பனமாக விளங்கினர். இதனால் அவ்வணி ரன்வேட்டையில் ஈடுபடமுடியாது போயிற்று.

நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களை மாத்திரமே பஞ்சாப் அணியால் பெற முடிந்தது.

அவ்வணி சார்பாக முரளி விஜய் (34), சாகா (15) ஓட்டங்களைப் பெற ஏனைய அனைவரும் 10 இற்கு குறைந்த ஓட்டங்களையே பெற்றனர்.

பந்துவீச்சில் ஜடேஜா (3), நெஹ்ரா மற்றும் அஷ்வின் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர.

ஆட்டநாயகனாக மக்கலம் தெரிவானார்.

# நாடாளுமன்ற ஆர்ப்பாட்டம்; மாயமான தங்க மோதிரம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அண்மையில் நாடாளுமன்றத்தில் பகல் இரவாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தினிடையே உறுப்பினர் ஒருவரது மோதிரம் காணாமல் போயுள்ளது.

பதுளையில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த தகவலை வெளியிட்டார்.

குறித்த மோதிரம் சுமார் 24 இலட்சம் பெறுமதி வாய்ந்தது என்றும் பிரதமர் கூறினார்.

இந்தச் சம்பவத்தைப் பார்க்கும்போது திருடர்கள் யார் என்பதை மக்கள் அறிந்துகொள்ள முடியும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.